உ

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# பூரணசூத்திரம் - ௨௱௰௬.

இஃது

மயிலம்

சுப்பிரமணிய சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு


சென்னை-இட்டா,

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற்றமது

ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

சென்னை, ஆச்சாரப்பன் தெருவு 84-வது நெம்பர்.

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவர் அருளிச்செய்த

# பூரணசூத்திரம் - உ௱௰௬.

—(*)—

காப்பு.

ஓடியதோர் தந்திமுகன் றனைப்பணிந்து
உரைத்திடுவேன் பூரணசூத்திரத்தையானுந்
தேடியதோர் மந்திரத்தா லஷ்டசித்தித்
திறமாகவுரைக்கின்றேன் யோகியோர்க்குக்
கூடியதோர் கந்தமனைச் சிதம்பரத்தில்
குணமானகாலைதனைக் கூட்டிமூட்டி
ஆடியதோர் ஐம்புலனை மூலத்துள்ளே
அமைத்திட்டமூலகண பதியேகாப்பு.
ஒன்றானபூரணமு மாறாதார
முரைத்தற்குமேலா றுந் தொண்ணூற்றாறும்
பண்டான தீட்சைபதி னென் றாரெட்டி
பத்துடனே முப்பத்தி ரண்டுதீட்சை
உண்டானசமாதிகற்பம் வாசிநேர்மை
யுறைப்பானசிவயோகம் பிராணயந்தான்
நன்றானவாதத்தின் தீட்சையோடு
நலமானசவுக்காரத்திறவுகோலே. (௧)
திறவுகோல் முன்னுரைத்த நூல்கட்கெல்லாம்
செய்பாகங்கைபாகந் தீட்சைப்பாகம்
அறைகிறேன் சரிதையொடு கிரிகைமார்க்கம்
அப்பனேமுனிசித்தர் நூல்கட்கெல்லா
மறைபுகழாய்ச்சொன்னதெல்லாம் வெளியாய்ப்பாடி
மாட்டினேன் பூரணசூத்திரத்திற்காணும்
இறையளவுந்தப்பில்லை மறைப்போவில்லை
யிருநூற்றுப்பத்தாறு இந் நூல்காணே. ௨

நூல்.

காணப்பா விந்நூல்போ லொருநூலில்லைக்
காசினியிலிந்நூலைக் கண்ணிற்காட்டார்
பூணப்பா வைப்பதுக்குள் பூநீர்வித்தை
பூட்டினேன் வயித்தியத்திற் புகழோமெத்த
நாணப்பா வாறுநூற்றைம்பதுக்குள்
நலமானசூட்சத்தை நாட்டினேன்பார்
பேணப்பா முந்நூற்றில் காமதாமம்
பேசினேன் தீட்சைவிதி யிருநூற்றுள்ளே. ௩

உள்ளான பூசைவிதி யிருநூறுக்கும்
உத்தமனே முந்நூற்றில் செந்தூரங்கள்
விள்ளவே ஆயிரத்தி யிருநூற்றுள்ளே
விளங்கினேன் கருவெல்லாம் வெளியாய்ப்போச்சு
எள்ளளவுந் தட்பில்லை மறைப்போவில்லை
யெய்துமென்ற கருவெல்லாமிதிலேயெய்தும்
கள்ளடா கள்ளருக்கு விந்த நூலைக்
காட்டாதே பன்னிரண்டுங் காத்தாலீயே. ௪

ஆறுதாரம்.

ஈவதுதானாருக்கு சிவயோகிக்கு
இகத்திலுள்ள மாண்பருக்கு ஈய்ந்தாயானால்
நோய்மிகுந்து சாவாரோ சொன்னேன் மைந்தா
நுண்மையாய் மனதில்வைத்து நுணுக்கங்கண்டு
தாய்பதத்தைப் பூசித்துக் கற்பங்கொண்டு
சமாதிக்குளிருந்து வைத்துத் தலைவணங்கி
நீமலைமேலேறிவிடு லோகத்துள்ளே
நின்றுக்காற்கொல்லுமடா நிசஞ்சொன்னேமே. ௫

மூலாதாரம்.

நிசமான பூரணத்தைச் சொல்லக்கேளு
நின்மலத்தாயென் றனுக்கு வுபதேசித்தாள்
வசமான அடிமூலங் கணேசர்கோவில்
வட்டமாமைங்கோணந் திரிகோணத்தில்
எசமான கணேசரொடு வல்லபையுங்கூட்டி
யிருக்குமடா ஓம் ஈம் கிலீயுமென்று
வசமான அங் சிவு கணபதி தேவாவென்று
வாழ்த்தடா குண்டலித்தாய் வணங்குந்தானே. ௬
வணங்குவதுக்கிப்பநீ சக்கரத்தை
வரிசையாய்க்கீறியே யட்சரங்கள்
பிணங்காமல் ஈங்காரம் நடுவேயிட்டு
பேரானகோணமைந்திலைந்துமிட்டு
இணங்கவே தூபநைவேத்யத்தோடு
இலட்சமுருவற்றிடக் குண்டலித்தாயென்றுங்
கணமான கணபதிதான் பிரகாசிக்குங்
கயிலாயப்பரகதியைக் காட்டுந்தானே. ௭

சுவாதிட்டானம்.

காட்டுவது நாற்கோண மதன்மேலப்பா
கருதுவது விருகோண முக்கோணவட்டம்
பூட்டுவது பிரமனொடு சரஸ்வதியுங்கேளு
புகலுவேன்-நங்-பங்-ஸ்ரீம்-ஐங்-அங்-பிரமதேவாவென்று
கூட்டுவது லட்சமுரு வேற்றுதற்குக்
குறிசொல்வேன் நாற்கோணம் நாலெழுத்துமிட்டு

நீட்டுவது விந்துவிலே அங்கென்றிட்டு
நிலையாகப் பூசிக்க முத்தியாமே. ௮

மணிபூரகம்.

மூர்த்தியாப் பிறைநடுவே முக்கோணமிட்டு
மூர்க்கமாபகாரமொடு உகாரமிட்டு
பத்தியாய் ஓங்காரம் ஸ்ரீங்காரங்கூட்டிப்
பச்சைவர்னமூர்த்தியென்றே பார்த்துசெபி
சத்தியாவட்சரங்கள் நடுவேயிட்டு
சாற்றுவாய்லட்சமுருத் தானேயாகில்
வெற்றியாங்குண்டலியும் மேலேயேறும்
வேதாந்தபூரணத்தில் சேர்க்குந்தானே. ௯

அனாகதம். சேர்க்கின்றமுக்கோண முருத்திரமூர்த்தி
திகழான அறுகோண முனையேயிட்டு
ஆர்க்கின்றவிந்துவதி னடுவேயிட்டு
அளவானசிகாரமொடு மகாரமிட்டு
பார்க்கின்றஸ்ரீங்கார ஓங்காரந்தான்
பகர்கின்றவகாரமொடு கிலீயுங்கூட்டி
தீர்க்கின்றருத்திரத் தேவாவென்று
செபிக்கவேவாசியது யேறும்பாரே. ௰

விசுத்தி. பாரடாலட்சமுரு வேறிற்றானல்
பகருமறுகோணமதில் விந்துவிட்டுச்
சேரடாவகாரமொடு ஓங்காரந்தான்
சிறப்பானஸ்ரீங்காரஞ் சிவாயநமாவென்று
தீரடாமயேசுவர தேவாவென்று
செபித்திடுவாய்லட்சமுரு திறமாய்த்தானே
ஆரடாவுனக்கீடு வாசிசித்து
யாறெழுத்துமறுகோணத் தறைந்திட்டேனே. ௰௧

ஆக்கினை. அறைந்திட்டமூன்றெழுத்து நடுவேபோடு
அருளானசதாசிவத்தி னருளைப்பாரு
விறைந்திட்டவிந்துவிட்டு நடுவேகேளு
விதமானவைங்கோண முக்கோணந்தான்
உறைந்திட்டசோடசந்தா னைந்துக்கூட்டி
யுறவான அங்கிஷ ஐம் ஓம் என்று
பறைந்திட்டசதாசிவதே வாயாவென்று
பகருவேனிலட்சமுரு பரிந்துநோக்கே. ௰௨

நோக்கடாவைங்கோண மைந்துமிட்டு
நுணுக்கமடாவிந்துவுக்குள் முக்கோணத்தில்
ஆக்கடா அம் அங்கிஷ ஐம ஓமென்று
அப்பனே ஸ்ரீங்கார மிட்டுச்சேவி
மூக்கடாபாயாது வாசிதானு
மூக்யமடாமேல்மூலத்தாணிப்பாரு

நாக்கடா அமுர்தமது சேமைபாயும்
நலமானகேழா றுநவின்றிட்டேனே. ௰௩

## மேலாதாரம்-அக்கினிமண்டலம்.

ஏனென்றவாதார மேலேயாறு
மியம்புகிறேனன்றாக வியல்பாய்த்தானே
தேனென்றசதாசிவத்தின் மேலேகேளு
தீயானமண்டலந்தான் திரிகோணமாகி
வானென்றமண்டலத்தில் திரிகோணத்துள்
வைத்திடுவாயகாரமொடு சவ்வுந்தானே
கானென்றமலமறுக்கு மக்கினிமண்டலத்திற்
கண்டிப்புவற்றுவிடுங் கனலிற்றானே. ௰௪
கனலிலேவாயுவந்து புக்கிற்றானாற்
கண்திறந்துவமுர்தமது கனிந்துகாயும்
புனலானவமுர்தமுண்டால் காயமீறும்
போச்சுதடாநரைதிரையும் புதுமையாச்சு
அனலிலேவெந்ததொரு பாண்டந்தானு
மசையுமோநீருக்கு வதுபோலப்பார்
நினவிலேயித்தியான மூட்டிமூட்டி
நிச்சயமாய்சமாதிக்குள் நிலைக்குந்தானே. ௰௫

## சூரியமண்டலம்.

நிலையானவழற்குளமண் டலத்துக்கப்பால்
நேரானசூரியமண் டலத்தைக்கேளு
நிலையானவிந்துவடா உகாரமிட்டு
செபித்திடுவாய்சூரியனே கோடிகாந்தி
மலையாமல்வாயுவதிற் சேர்ந்ததானால்
மைந்தனேயுன்னுடலிற் பிரகாசத்தைக்
கலையானசூரியனைப் போலாந்தேகங்
கல்பிஷங்களில்லையில்லைக் காணிங்கானே

## சந்திரமண்டலம்.

காணுகின்றசூரியமண்ட லத்திக்கப்பால்
கலைமாதியாஞ்சந்திரமண் டலத்தைக்கேளு
தோணுகின்றசோதியடா மௌனவீடு
சொல்லரிதுசொல்லுகிறேன் அங்கென்றானு
பேணியேசெபித்திடவே சோதிகோடி
பிரகாசமாயிடுங்காண் பெருமைபேசார்
ஆணுவங்களற்றதடா அரூபாரூபம்
அட்சரங்களற்றவிட மறையைக்கேளே. ௰௭
கேளப்பாஓங்கார மதன்மேல்நிற்குங்
கெடியானவைந்தும்மூன் றெழுத்துமீதில்
நாளப்பர்பஞ்சகர்த்தா ளைவரீதில்
நலமானஆன்மர ஜீவகளைவுமீதில்

வேளப்பாஓமென்று தியானஞ்செய்ய
　　வித்தானபிறவியெல்லா மற்றுப்போச்சு
சூளப்பாபிறவியுமிவ் வளவேயாச்சு
　　துலங்கின்றபூரணத்தைச்சொல்லப்போமோ. ௰அ

ஏகாட்சரம்.

போமென்றபூரணமு மிதுவேயாச்சுப்
　　பூரணமாஞ்சூட்சத்தைப் புகலக்கேளு
தாமென்றஅகாரத்தில் உகாரமிட்டு
　　தனித்துநின்றஓங்காரஞ் சுற்றிக்கட்டி
வாமென்றவதின்கீழே மகாரமிட்டு
　　மகாரத்தின்மேலேறி அகாரத்துள்ளே
ஊமென்றறீங்காரம் நடுவேயிட்டு
　　யுயரவேசூலமிட்டு சிங்கிவங்கே. ௰௯
வங்கென்றுஇருபுறமும் வைத்தாயானால்
　　மைந்தனேசூக்ஷமந்து ஏகசூக்ஷம்
பங்கென்றபூரணமு மிதுவேயாச்சு
　　பகருகின்றமந்திரமு மிதுவேயாச்சு
தங்குசடாட்சரமு மிதுவேயாச்சு
　　தருவானஎட்டெழுத்து மிதுவேயாச்சு
அங்குபஞ்சாட்சரமு மிதுவேயாச்சு
　　ஆதியென்றமூன்றெழுத்து மிதற்குள்ளாச்சே. உ௰
ஆச்சடாதசதீட்சை யிதனுக்குள்ளே
　　அண்டசராசரங்களெல்லா மிதனுக்குள்ளே
பேச்சடாவொன்றுமில்லை யிதனையல்லோ
　　பெரியோர்களுரையாமல் மறைத்தாரையா
வாச்சடாஐம்பூத மிதனுக்குள்ளே
　　மதியிரவியானதுவ மிதனுக்குள்ளே
காச்சடாஅண்டமொடு புவனமெல்லாங்
　　கருந்துநின்றவத்துவிதங் கண்டுகொள்ளே. உக
கண்டுகொள்ளுமிவ்வெழுத்தைக் கற்பமெட்டில்
　　காணப்பாபதிற்றுடனே கர்மமாடுங்
கண்டுகொள்ளுமிவ்வெழுத்தை யாதாரத்தில்
　　கர்மமாந்தீவினைகள் காணுதோடுங்
கண்டுகொள்ளுமிவ்வெழுத்தை யாதாரத்தில்
　　கட்டாகவைத்துடனே வாசியேறுங்
கண்டுகொள்ளுமிவ்வெழுத்தைப் பெரியோரெல்லாங்
　　கட்டினார்நூல்தோறுங் காணுதென்றே. உஉ
காணுதுஆணுமல்லப் பெண்ணுமல்ல
　　கருதிப்பாரலியுமல்ல கருதிச்சொல்லத்
தோணுதுவுருவொன்று மரூபாரூபந்
　　துலங்கின்றபூரணத்தைச்சொல்லிவிட்டேன்

தோணுமல்நின்றவரே குருவைக்காண்பார்
குருக்காணுராணே கண்ட குருடராகு
மாணுன ஆதார தீட்சையாறு
மப்புறத்தில்நின்றதொரு ஆறுஞ்சொன்னேன் உரு
ஆராறுபன்னிரண்டு தலமுஞ்சொல்லி
யதில்நிற்குமட்சரஞ் சக்கரமுஞ்சொல்லி
ஏறுதவாசியது ஏற்றஞ்சொல்லி
யேகாட்சரபூரணமு மெடுத்துக்காட்டி
கூறுதகருவையெல்லாங் கூறினேனியான்
கூற்றனின்றவிடமிதுதான் குறித்துப்பாரு
தேறுதபேருக்குந் தேறுந்தேறுஞ்
சிவசிவர்பூரணத்தின் திறந்தான்காணே. உச

சிவதீட்சைபதினொன்றின் விபரம்

கூ-உ-தீட்சை.

திறமானதீட்சையது வழியதாகச்
செப்புகிறேன்சிவதீட்சை பதினொன்றுந்தான்
கறவாதேகறந்ததொரு பால்போலப்பா
காசினியோர்பிழைக்கவென்று கருவைச்சொன்னேன்
மறவாதேநீகேளு அம் உம் சிம் வம் யம்ஓமென்று
வளர்த்துவாயமுதற்றீட்சை மருவிக்காணும்
நிறைவாக அவ்வும் மவ்வும் ஓம் நமசிவாயாவென்று
நிகழ்த்துவாயிரண்டானதீட்சைநேரே. உரு

ரு-ச-தீட்சை.

நேரானமூன்றாகுந் தீட்சைகேளு
நிச்சயமாய்உம் அம் சிவ சிவாயமென்று
வேறானஓமென்று செபித்தாயானால்
வெற்றியடாமூன்றான தீட்சையாச்சு
பாராநீநாலான தீட்சைகேளு
பகருவேன்சிவாயநம ஓம் ஜயமென்று
சீராகச்செபித்திடுவா யைந்தான்தீட்சை
செப்புகிறேன்நன்றாகத் தெளிந்துகொள்ளே. உசு

ரு-சு-எ-தீட்சை.

தெளிவாகவைந்தான தீட்சைகேளு
சிவசிவா அவ்வும்உவ்வும் சவ்வும்ஓம்என்று
நளினமாயாறான தீட்சைகேளு
நவிலுகிறேன்மவ்வும்உவ்வும் நமசிவாயா
குளிர்வாகஓம்என்று செபித்தாயானால்
கூறுவேன்ஏழான் தீட்சைமார்க்கம்
எளிதாதகிலிம் நமசிவாய அவ்வுஓமென்றே
யேற்றுவாயெட்டானதீட்சையெண்ணே. உஎ

அ-கூ-தீட்சை.

எண்ணவேஓம்ஐயும் சிவ அங்கிஷாயா
யென்றுதான்செபித்திடுவா யெட்டாந்தீட்சை
பண்ணவேயொன்பதாந் தீட்சைகேளு
பரிவானசிவாயநம அம் உம் ஓமென்று
உண்ணியேயோதிடவே பத்தாந்தீட்சை
யுரைத்திடுவாய் பதினொன்றுந்தீட்சையோத
நண்ணவேமூன்மவுனம் ஏகதீட்சை
நாடினேன்பூரணத்தை நய்ந்துபாரே. உஅ

ஆதாரம்பனிரண்டின் தீட்டைவிபரம்.

பாரப்பாதீட்சையது பதினொன்றுந்தான்
பரிவானஆதாரம் பனிரெண்டுக்கும்
நேரப்பாவொவ்வென்றுக் கொன்றேதீட்சை
நிறுத்தியேயாதாரம் நிலைத்துப்பாரு
சீரப்பாபன்னிரண்டுக் கொன்றேதீட்சை
செப்பினேன் பூரணத்திற் செப்பினேன்யான்
ஆரப்பாதீட்சையொன்றுக் காதாரமொன்று
ஆண்டொன்றுதீட்சையொன் றழுதிப்பாரே. உகூ

சத்திதீட்சைபதினொன்றின்விபரம்.

அழுத்தமாய்சத்தியுட தீட்சைபதினொன்று
மறைகிறேன் உம் ஆம் மம் ஈம்ஓமென்று
வழுத்தவேவாலையுட தீட்சையாச்சு
வரிசையாயிரண்டான தீட்சைகேளு
பழுத்ததொரு யம் ரம் அம் உம் மம்ஓமென்று
பலவாகவோதிடவே பலிக்குஞ்சித்தி
எழுத்தாகுமூன்றுன் தீட்சைகேளு
ஈம் ஓம் அம் உம் மம் என்றிதனையோதே. ௩ய

ச-ரு-சா-தீட்சை.

ஓதவேநாலான தீட்சைகேளு
உம் மம் ஈம் ஐம் ஓம் என்றோது
கீதமாமைந்தான தீட்சைகேளு
கிலீம் ஓம் மம் அம் ஐயென்றுகிருபையாக
வேதமாம் ஆறுன தீட்சைகேளு
விளங்கவே ஓம் வம் ஈம் விதமாய்த்தானே
நீதமாமேழான தீட்சைகேளு
கிலைத்ததொருஸ்ரீம் ஈம் அம் ஐயுமென்றே. ௩க

அ-கூ-ய-தீட்சை.

என்றுநீயெட்டான தீட்சைகேளு
விகம்புவாய் சவ்வும் அவ்வும் மவ்வும் ஓமென்று
தன்றுநீயொன்பதாந் தீட்சைகேளு
நம மம் சிம் வம் ஐம் ஓம் நலமாய்த்தானே

யொன்றுமேபத்தான தீட்சைகேளு
உம் மம் சம் ஈம் ஓமென்றுறவாய்த்தானே
சென்றிடவேபத்துந்தான் சேவிதீட்சை
திறமாகதேவிபத்துந் தெளிந்துபாரே. ௩௨.

௰௧-தீட்சை.

பாரென்றேன்பதினொன்றாந் தீட்சைகேளு
பகருவேன் ஓம் றீம் சம் மம் என்றேதான்
பூரென்றபூரணமா மோகதீட்சை
பூட்டினேனுதார தீட்சையுள்ளே
நேரென்றேன்பூரணமாம் வாலைதீட்சை
நிகழ்த்தினேன்கண்டுகொள்ளு நிசமதாகத்
தீரென்றேன்தீட்சைபத்து மாதாரத்துள்
திறமாகவொன்றுக்கு வருடமொன்றே. ௩௩.

தீட்சைசெய்மார்க்கம்.

வருடமாந்தசவருட மாருசெய்வார்
மைந்தனேசித்தரொடு முனிவர்செய்வார்
பரிஷமாயுலகத்தி லுள்ளபேர்கள்
பத்திகொண்டலைவார்க ளுரைக்கமாட்டார்
துரிதமாயுரைத்தாலுங் குருக்காணாது
சொல்லுதற்குவுரைப்பார்கள் நூல்காணாது
புருஷமாய்கோர்வைநூல் கிட்டாவிட்டால்
பேர்க்கென்னவாசையென்ன பொய்யதாமே ௩௪

நூலின்மகத்துவம்.

பொய்யாமலிருக்கவென்று லிந் நூல்வேணும்
புகலரியதீட்சைக்கு மியோகத்துக்கு
மெய்யானகற்பமுதல் காயசித்தி
யிருதானவாதவித்தை குளிகைசித்தி
கையானமுறைகள் வாததீட்சைக்
கருவானமறைப்பென்ற சவுக்காரப்போக்கு
உய்யாமனூல்களிலே யொளித்தபாக
மொளியாமலெடுத்துரைத்தே னுண்மையாமே ௩௫

நூலின்மார்க்கம்.

உண்மையாமிந்நூல்தான் கிட்டாத்தோஷம்
உலகத்தின்மானிடர்க ளுளரிப்போனார்
தண்மையில்லாமிந்நூல்யார் கொடுக்கப்போறார்
சாத்திரந்தான்மெத்தவுண்டு சமுசயந்தீராது
வெண்மையாய்ச்சட்டமுனி தீட்சையிருநூறும்
விளம்பினார்வெளியாக வென்றுமூலா
அண்மையாய்க்கிழித்தாரே ஐயோவையோ
அல்லாமலின்னமொரு ஆகங்கேளே ௩௬

சாபவரலாறு. ஆகமங்கள்பாடிமுன்னே நவசித்தாதி
யதின்பிறகுநவகோடி கோடாகோடி

பாகமுடனுச்சுதென்று பேசிக்கொண்டு
பரமசிவன்சாபமிடப் பாவித்தார்காண்
யேகமாய்சாபமிட்டோம் வாமத்துக்கு
மியலானவட்சரங்கள் தீட்சைமார்க்கம்
போகமாயுயிர்களைத்தான் வாங்கிப்போட்டோம்
போட்டதனால்நூல்களெல்லாம் பொய்யாய்ப்போச்சே

நூல்சித்தி.

போச்சுதென்றலையாமல் சிவனுத்தாரம்
பூட்டியேகேட்டுநா னிந்தநூலில்
ஆச்சுதென்றுமறைத்ததெல்லா மருளிச்செய்தே
னரகரரசாபங்கள் நிவர்த்திசெய்தேன்
மூச்சுதென்றுபோகாமல் முறைதப்பாமல்
முன்னேதோ பின்னேதோ வென்றெண்ணாமல்
காச்சுதென்றுகாச்சிவிட்டே னுலகத்துள்ளே
கண்டவர்க்கிந்நூல்சித்தி முத்தியென்னே ௫௮

நூலீயாமை.

முத்தியிதுமோட்சமிது சித்திகோடி
முக்கியமிதுசித்தருக்குங் காட்டொண்ணாது
சத்தியிதுசப்புவிது வொன்றாய்ச்சொன்னேன்
சகலநூற்கெல்லாந்தான் குருநூலப்பா
எத்தினார்சாபத்தை நிவர்த்திசெய்து
எத்தினால்தீட்சைதா னெளிதிலாகும்
புத்தியுடனிந்நூல்தா னார்க்குங்கிட்டாப்
புண்ணியர்க்கேஇதுகிடைக்கும் பொருளைப்பாரே. ௫௯

சாபநிவர்த்தி.

பொருளானசாபங்கள் நிவர்த்திசெய்யப்
பூட்டினேன்சாபமது பொய்யாய்ப்போக
அருளானசிவாயநம அம்உம்என்றேதான்
அப்பனேசிம் கிலீம் ஸ்ரீம்ஓம்என்றேதான்
மருளாமல் ரம் மம்ஓம் என்றேதான்
மாட்டுவாயிலட்சமுரு வேழிற்றனல்
இருளானசாபங்கள் நிவர்த்தியாகும்
ஏகமாய்ச்சொல்லிவிட்டேனியப்பக்காணே. ௬௰

வயிரவர் தியானம்.

இயம்புவேன்வயிரவன்றன் தியானங்கேளு
இயல்பாக யம் நம் லம் ஷம் இங்கென்றேதான்
சயம்பாக ஷங் வங் மங்கென்று
சாத்தியமாய்வயிரவத்தினமந்தானே
நயம்பெறவேயெண்கோணமிட்டுத்திரு
நாட்டுவாய்வஸ்துவொடு சத்திவைத்து
செயம்பெறவே பூசைசெய்வடைமாலைசாத்தி
சித்திக்குஞ்செய்தொழில்கள் திடமாய்த்தானே. ௬௧

சுப்ரமண்யர் தியானம்.

திறமாகசுப்ரமண்யர் செபத்தைக்கேளு
செயமாகுமெந்தனுடகுருதானப்பா
அறமாக அம்-உம்-ஓம் ஸ்ரீம் ரீம் சம் வம்சரவணபவதேவாயா
அறுமுகவாசிவசுப்ர மண்யநமாவென்று
உறவான அறுகோணம் நடுவேவிந்து
உத்தமனேவிருத்தமொன்றுவாசல்நாலு
திறமானநால்வாசல் வீரபாகுதேவர்
நிச்சயமாய்வைத்துநீ பூசிப்பாயே. ௪௨

அகஸ்தியர் தியானம்.

பூசிப்பாய்பானமொடு சுத்திவைத்துப்
புகழானசாதிபுஷ்ப வழூகுபூரம்
ஆசிப்பாசுப்ரமண்யர்சித்தியாகு
மப்பனேகேட்டதெல்லா மருவிச்செய்வார்
நேசிப்பாயென்னுடைய தியானந்தன்னை
நினைத்திடவேசித்திவந்துநிலைநிக்கும்பாரு
வாசிப்பாய் ஓம் சிம் வம் அம் உம் மம் தான்
மகத்தான அகத்தீசர் வென்றுகூறே. ௪௩

பிராணமம்.

கூறிடுவாயென்குருவே சாமியென்று
கோணமுமாமுக்கோணஞ்சுழினைமீது
ஏறுவாய்பிராணயம்வாசியேறும்
இடகலையாஞ்சந்திரனிலேறுயேறு
பேறுபெறவேண்டிலது லட்சந்தீரு
பிராணயஞ்சித்தியடா யோகசித்தி
ஆறுடனேயாறுகும் பன்னிரண்டும்
அப்பனேபூரணத்தி லடக்கிப்போமே. ௪௪

நால்நிலையாமை.

அடங்கினாலாறுதலம் வெளியாய்க்காணு
மதீதமென்றமேலறு பூரணமுந்தோன்றும்
துடங்கினால்சிவயோகந் துடங்கவேணும்
துரியாதீதந்தனிலே நிற்கவேணும்
துடங்கினால்கூடுவிட்டுச் சீவன்போனால்
நோக்கிலதிற்பிறக்குமென்று சொன்னார்முன்னோர்
அடங்கினலொன்றுமில்லை வருவதேது
அச்சடத்தைவாழ்வித்தா லவனேசித்தன். ௪௫

பிறவிவருதல். சித்தனைப்பிறப்பதுதா னென்றுக்கால்
செகத்திலேகோடியிலே யொருவனுண்டு
உத்தமொருவிட்டகுறை யென்பதென்ன
வுதித்தகலையெந்நேர மூணிப்பாரு
பெற்றபேறெப்படித்தான் வந்ததானல்
பிராணனல்லோ பூரணத்திற் சேர்ந்ததாலே

முத்தனையெடுத்தசடஞ் சித்தியாகு
  முன்னுமில்லைப்பின்னுமில்லை முறையைப்பாரே. ௪௬

கற்பமுண்ணு முறைமை.

முறையாகக்கற்பத்தைச் சொல்லக்கேளு
  மூதண்டலேகியமும் அயக்காந்தந்தான்
துறையாகவறுசுவையுங் கழற்றுமுன்பே
  துரிதமாய்க்கொண்டுவிடு மண்டலந்தான்
நிரையாகவல்லாரை வருஷமொன்று
  நேயமாய்க்கொண்டபின்பு கடுக்காய்கொள்ளு
அறையாமலதின்பிறகு மிளகுகொள்ளு
  அதின்பிறகுகொங்கணர்சொல் முறையைக்கொள்ளே. ௪௭

வல்லாரைவிபரம்.

கொள்ளுதற்குவல்லாரை முறையைக்கேளு
  குழிவெட்டிக்கருப்பேற்றிப் பயிரேசெய்து
விள்ளுகிறேனிதையெடுத்துக் காடிவார்த்து
  வெண்மைபெறக்கவிழ்யே நிழலிற்போடு
உள்ளுறவேயுலர்ந்தபின்பு யிடித்துத்தூளா
  யுத்தமனேபுதுக்கலசந் தன்னில்வைத்து
தெள்ளுறவேகாடியிலே தின்னவேணுஞ்
  செப்புகிறேன்காடிவைக்கச் செய்கையென்னே. ௪௮

காடிவைப்பு.

என்னவேகருங்குருவை நெல்லிக்குத்தி
  யியலானபுதுப்பானை தனிற்சமைத்து
வன்னமாய்ச்சுத்தசல மதனில்வார்த்து
  வைத்திடுவாய்மண்டலந்தான் வேடுகட்டி
சொன்னதொருவெய்யிலிலே தினமும்வைத்துச்
  சுருதியாய்மறுபானை பகுந்துமூடி
முன்னுள்ளபாண்டத்தை யனலிற்காச்சி
  முறையாகவதிலிட்டு சுத்தசலம்வாரே ௪௯

காடி—மகத்துவம்.

சலம்வார்த்துப்பின்னுமதை ரவியில்வைத்துச்
  செய்திடுவாய்மண்டத்துக் கொருசோறாக
நலமாகவெவ்வேறே புகுந்துகாச்சி
  நாட்டியேவெயிலில்வைத்து ஆறுமாதம்
பெலமானகாடியிது வல்லாரைக்குப்
  பேசாதேயிக்கருவைப் பெரியோர்சொல்வார்
அலையாமல்வல்லாரைச் சூரணத்தை
  யழகானபுன்னைக்கா யளவுகொள்ளே. ௫௰
கொள்ளடாசமாதியிலே யிருக்கும்போது
  கூறுகப்பூசித்து தீட்சையோதி
விள்ளடாவெயிலுடனே காற்றுமாகா
  மேனியதுவலவாகா திலேசுயாகா

தள்ளடாவெண்ணெய்சுண்ணங் கடுகுவுள்ளி
தரணியில்பெண்மாய்கை சற்றுமாகா
கள்ளடாவாகாது கஞ்சாவாகா
காசினியின்மீன்இறைச்சை யாகாநீக்கே. ருக

அடக்கம்.

நீக்குவதுபுளியோடு இலையுமுப்பும்
நிலையானவுறக்கமொடு கோபமாகா
ஆக்குவதுசுணையாகா பொய்யுமாகா
அப்பனேமனமொன்றாய்ப் புத்தியொன்றாய்த்
தாக்கவருமாய்கையெல்லா மடித்துதள்ளு
சதாநித்தப்பூரணத்தி லகலாமல்நில்லு
போக்குவதுபரத்தையேநீ போக்கினுக்கால்
புகழானசிவயோகம்புனிதமாமே. ருஉ

யோகநித்திரை.

புனிதமாயுறங்கவென்றால் வலக்கைமேலே
பூட்டாகக்கால்நீட்டிப் பூரணத்தைநோக்கி
யனிதமாய்க்கேசரத்தில் மனத்தைவைத்து
அப்பனேலலாடத்தே தூங்கவேணும்
மனிதனைப்பிறந்தாக்கால் சாகாக்கல்வி
வாசிக்குஞ்சிவமோடு வாழ்க்கைசேர்வான்
செனிதமாஞ்சண்டாளப் பிறவோர்கள்
செத்திறந்துசெனிப்பார்கள் செகத்திற்றானே. ருங

கற்பத்துக்குப்பத்தியபாகம்.

செனியாமல்கற்பங்கள் கொள்ளும்போது
திரிகடுகுதிரிபலையுஞ் சீரகம்ஓமம்
கனியானசாதிக்காய் கிரும்புபத்திரி
கருவேப்பிலையோடு ஆவிரைப்பால்
தனியானசருக்கரைதேன் வாகுருவையரிசி
சுதாரானதுத்துவளை புளியாரையோடு
கனியானசிறுகீரை சிறுப்பயறுமாகும்
கட்டியதோருப்பாகுங்கொறுக்கையாமே. ருச

கடுக்காய்க்கற்பம்.

ஆகுமேகற்பூரச் சிலையின்சுண்ணம்
அண்டமொடுகல்நாருந் தங்கச்சுண்ணம்
வாகுடனேயான்சொன்னேன் மற்றொன்றுமாகா
வகையாகஇந்தமுறைகற்பங்கொள்ளு
மோகமாயக்கடுக்காயின் முறையைக்கேளு
மூயல்வாகச்செங்கடுக்காய் பொற்காய்வாங்கி
பாகமாயிடித்துதனைச் சூரணித்து
பாச்சுதற்குசிற்றோரண் டெண்ணெய்வாங்கே ருரு

கயனக்குறி, எண்ணெயதுவுழக்கடா பொடிதானுழி
யியல்பாகவிட்டதனை மைபோற்கிண்டி

கண்ணுறைபீங்கானில் பதனம்பண்ணி
கனமானபுன்னைக்காயளவுகொள்ளு
விண்ணதனைநித்தநித்தஞ் சண்ணுட்டப்பார்
வெளிநிற்குஞ்சுழினையிலேவாசியேறுங்
சண்ணதனைமுறுக்கியேயேறப்பாரு
கபாலத்தில் அமுர்தமதுகனிந்துபாயும். ௫௬

கபசுத்தி.

பாயுமேசுழினைதனைத்திறப்பதற்குப்
பகருகிறேன்கற்பமொன்றுபரிவாய்த்தானே
காயுமேகரிசாலைச்சாறுநாழி
கருதியதோர்நெய்நாழிகலந்துகாச்சி
வாயுமேமெழுகுபதந்தன்னிலேதான்
வடித்துவைத்துக்கைப்பெருவிரலிற்றடவிப்
பாயுமேயுண்ணாக்கிற்புரளவைத்துப்
பழகவேகபமெல்லாமற்றுப்போமே. ௫௭

மூலசுத்தி.

அற்றுவிடும்இரண்டுவிரல்வாயிலோட்டி
யனவானகபமெல்லாம்கக்குங்கக்கு
மற்றுமினிமூலத்தின்சுத்திகேளு
வாகானகுமரிச்சாரிற்றேரண்டெண்ணை
யுற்றதனைமுன்போலேகாச்சிக்கொண்டு
உறவாகநடுவிரலில் தோய்த்துக்கொண்டு
சுற்றிவிடுமூலத்தின்மலமெல்லாந்தான்
சுகமாகக்கீழ்நோக்குஞ்சுத்தியாமே. ௫௮

குறி மிளகுகற்பம்.

சுத்தியாயிருநேரம்நாட்டம்பாரு
சுழிதிறக்குங்ஷணத்திற்சொக்கிப்போமே
பத்தியாமமுர்தங்கண்டிறந்துபாயும்
பாவிகட்கும் இக்கருவைப்பகரலாமோ
வெற்றியாமிளகினுடகற்பங்கொள்ள
விபரமதைச்சொல்லுகிறேன்விரித்துநன்றாய்ச்
சித்தியாங்கன்மிளகாய்த் தெரிந்தெடுத்துச்
சிறப்பானவமுரிதனைத்தேத்தாம்வித்தால். ௫௯

மிளகுசுத்தி மூதண்டம்.

வித்தாலேமுரித்ததனைத்தெளியவைத்து
விதமாகஐயைந்தாய்த்தினமுமேற்று
முத்தானவமுரியுடன்கொள்ளும்போது
முக்கியமடாநூறுக்குமதிகம்வேண்டாம்
கொத்தானஉஷ்ணந்தான்மிஞ்சிற்றானல்
கூறிலொருபடியாகுஞ்செலத்தினுள்ளே
சுத்தானஅறுகின்வேர்பிடிதானென்று
சொல்லுகிறேன்மிளகதுதானிருபத்தைந்தே. ௬௰

ஸூதண்டமகத்துவம்.

அஞ்சாமற்காய்ந்ததுதானுழக்கேயாறு
 லப்பனேபசுவெண்ணெய்பாக்களவுபோட்டு
மிஞ்சாமற்கொண்டிடவேவெப்புத்தீரும்
 விருதானகியாழமிதுமெத்தநன்று
நஞ்சுண்டசிவனன்றுகற்பங்கொண்டு
 நாதனார்சடைமீதுதரித்தகற்பம்
பஞ்சகணபதிஸூலவறுகிதப்பா
 பார்த்தாக்காலிதன்பெருமைப்பாரொண்ணுதே. ௬௧

மறுகற்பம்.

ஒன்றான அயக்காந்தங்கொண்டபின்பு
 வுத்தமனேயறுசுவையுங்கழற்றிப்போடு
நன்றானவல்லரைகடுக்காயோடு
 நலமானமிளகோடுமறுகற்பங்கொள்
நன்றானசட்டமுனிசொன்னமார்க்கம்
 நலமாகக்கொண்டிடகாயசித்தி
விண்டானகெவுளிசித்தியோகசித்தி
 வேண்டியதோரட்டமாசித்தியாமே. ௬௨

கற்பமுண்ணுமுன்பக்குவம்.

ஆமென்றஸூவியெல்லாங்கறப்பேற்றிக்கொள்
 அப்பனேஉன்றிரேகம்பெலத்துப்போச்சு
ஓமென்றகற்பங்களுண்ணும்போது
 வுடலிலேநோய்வந்தால்மூந்நூற்றுள்ளே
தாமென்றசெந்தூரம்லேகியங்கள்
 தப்பாமற்செய்துவைத்தும்பின்னேகற்பம்
நாமென்றுநோய்கள்வந்தால்செந்தூரத்தை
 நாட்டிடவேநோய்தீரும்நளினமாமே. ௬௩

கற்பமுண்ணக்காலம்.

நளினமாய்க்கற்பங்கள்கொள்வதற்கு
 நலமானகாலத்தைச்சொல்லக்கேளு
தெளிவானகார்த்திகையுமார்கழியுமாக
 திறமானவறுசுவையுங்கழற்றிப்போடு
சுளுவானவல்லரைத்தொடுத்துக்கொள்ளு
 சுகமானக்கடுக்காய்தான் ஆனிமாசஞ்
சொளியமல்கட்டளையைமுடித்துக்கொண்டு
 வுதையாதிஸூன்றுக்குங்கற்பந்தின்னே. ௬௪

பத்தியமுண்ணுங்காலம் தலை.

கற்பந்தான்தின்பதற்குஸூன்றேமுக்கால்
 கடந்தபின்பத்தியங்கொள்கணலேறாது
உற்பனமாக்கற்பத்தைச்சூரியனிற்கொள்ளு
 உண்பதுவுமுறங்குவதுமொன்றேமார்க்கம்

நற்புடனேபூசைசெய்வார் காலமூன்றும்
  நாளொன்றுக் கிருநேரம்நாட்டம்பாரு
சொற்பமென்றபெண்ணாசை விட்டாலுந்தான்
  சுகமானசயனத்தில் பெண்தான்வந்தே சுரு

சயனகாய்கை-வாசிகுறி.

வந்துதான்மருவிடவே விழுந்துவீழு
  மகத்தானதபமெல்லா மழிந்துபோகும்
கொந்துதானழியாமல் நினைவாய்த்தூங்கு
  குறியானபுருவமையங் குறியைப்பாரு
வெந்துதான்போகுமடா மூலத்தீதான்
  மேற்கொண்டால்மாயையெல்லாம் வெளியுமாகும்
உந்தித்தாற்பசியாம லிருக்கவென்று
  லுறைப்பானவாசிகொண்டுவழுர்தமுண்ணே. சுசு

கற்பமுண்ண-அறிவு

உண்ணுவதுசாதகமாய்த் தள்ளவேணு
  முற்றஅறுசுவையதனை நீக்கவேணும்
பண்ணுவதுசிவயோகம் பண்ணவேணும்
  பார்வதியுஞ்சிவனுடைய தீட்சைவேணும்
எண்ணுவதுமிதுகளெல்லா மிந்நூல்வேணும்
  மிறவாமலிருக்கவென்றால் கற்பம்வேணும்
கண்ணுவதுகற்பமுண்ணப் பாத்திரங்கள்
  காந்தத்தினருமைதனைக் காட்டுறேனே. சுஎ

காந்தபாத்திரப்பெருமை

காட்டுகிறேன்காந்தமது மூன்றாறுள்ளே
  கலந்துரைத்தபடியுருக்கிக்கருவில்வாரு
மூட்டுகிறேன்கிண்ணியைப்போல் வார்த்துக்கொண்டு
  முனையானகிண்ணியிலே பாலைவார்த்தால்
ஆட்டுகிறேன்பொங்கியது மேலேநிற்கு
  மப்பனே கனந்தத்தி னதிகம்பாரு
நாட்டுகிறேன் தயிர்போலா மந்தப்பாலை
  நலமாகக் கொண்டிடநோய் நாடாதென்னே. சுஅ
நாடாத கிண்ணியிலே கற்பமுண்ணு
  நலமான வமுதுண்ணு பாலுமுண்ணு
தேடாத நெய்தேனு முண்ணலாகுந்
  தினந்தோறுங் கொண்டாக்கால் சித்தியாகும்
ஓடாதுவிந்துவது கீழ்நோக்காது
  உறக்கந்தானொழுங் கட்டிப்போகும்
கூடாதசித்தியெல்லாங் கூடுங்கூடும்
  குறிப்பானரசமணியின் கூறுகேளே. சுகூ

ரசமணி. கூறானகாந்தத்தின் கிண்ணத்துள்ளே
  கொட்டியதே ரசத்தையின்னங் கூறக்கேளு

வீறுசைருமத்தஞ் சாறுவிட்டு
　வேகிறதோர் சுடுசோற்றுக்குள்ளேவைத்தால்
வேறானவாளைவீற்றிட்டுச்சாகும்
　வெள்ளீயம்போலுந்தான் வலுத்துப்போகும்
பேறுகவெடுத்துமணி பதினாறுக்கிப்
　பேணியேசெபஞ்செய்ய வெட்டுமாமே. எ௰

மணிததொழில்

ஆடுகிறமணியதனை சாரணையிற்றீரந்தா
　லண்டாண்டஞ் சுத்திவருங்கெவுனமாகுங்
கூடுகின்றபெண்ணோடே வாயிலிட்டால்
　குடிகெடுத்துவிந்துவது கட்டிப்போகுந்
தேடுகின்றதேடெல்லாம் ரசமணிதானப்பா
　தேடவென்றால்காந்தத்தின்கிண்ணங்கிண்ணம்
ஓடுகின்றவோட்டெல்லாங் காந்தத்தாலே
　யுத்தமனேகற்பத்துக் குறுதியாமே. எக

அருளீதல்.

ஆமிந்தவுறுதிசொல்லார் சித்தரெல்லா
　மாதிதொடுத்தந்தவரை யழகாகச்சொன்னேன்
ஒமிந்தநூல்போலார் வெளியாய்ச்சொன்ன
　னொளித்திட்டார்சித்தரெல்லாம் பேசிக்கொண்டு
நாமிந்தநூல்வழியாய்ச் சொன்னதென்ன
　நாட்டிலுள்ளோரெல்லாரு மாண்டுபோனார்
சாமிந்தப்படியானல் தோஷமென்று
　தாக்கினேன்பூரணத்தில் சாயுச்யந்தானே. எஉ

சமாதிகட்டும்வகை.

சாயுச்சியமாவதற்குச் சமாதிகேளு
　சஞ்சாரசமாதியது மவுனிக்காகும்
ரீயுச்யமாயதிலே கருவைக்கேளு
　நினைத்தகுகையாதாரம் போலுண்டாக்கி
யாயுச்யமாயதிலே பற்பம்போட்டு
　மைந்தனேயதிலிருந்துகற்பமுண்ணு
வாயுச்யமானதொரு யோகம்பாரு
　வளமானசித்திவந்தால் மலையிலேறே. எங

சித்தாருப்பருவம்.

ஏறியேயென்னைவந்து கண்டாயானா
　லியலானசித்தனென்று பேருமாய்வோம்
மாறியேமலைகளிலே சித்தர்கோடி
　மாறாட்டஞ்செய்திடுவார் மருலவேண்டாந்
தேறியேபொதிகையிலே முனைனேவந்து
　சித்தனென்றுபேர்வந்து முத்திரையும்வாங்கி
யேறியேமலைகளிலே நடக்கலாகு
　மித்தனைக்கும்வருவதுதானருமைதானே. எச

சிலவேட்கை. அருமையென்றசிவயோகம் வந்தானு
லதிகமாஞ்சித்தருக்கு ரூபங்கேளு
பெருமையென்றசட்டையொன்று பிரம்பதொன்று
பேரானபடிகமணி குண்டலத்தினோடு
தருமையென்றவுப்பினுட சரந்தான்கையில்
சட்டையுண்டுகபிலாய வற்கமானல்
அருமையென்றவிபூதியுற் றளவுமாகி
யப்பனேயோகதண்டு நம்முத்திரைகாணே. ௭௫

அகத்தியர்வேடம்-மூலகுருவேடம்.

நம்முடையமுதனிணிடைகாஷாயம்
நாதனுடமுத்திரைதான் சிரசிலாகும்
தம்முடையவற்கத்திற் கடிகலிங்கந்
தருவானகமண்டலமுந் தரிப்பார்பாரு
அம்முடையதீட்சைவிதி யோகமாற்க
மானந்தமூலகுரு வேடம்பாரு
கும்மென்றமேருவுக்குத் தெற்கேகேளு
கோடானகோடிசித்தர் கூடினாரே. ௭௬

சித்தர்களிடம்-உருவு.

மேரு—நாலுதிக்கிலுள்ளசித்தர் ரூபம்
கூடினார்மேற்கிலுள்ள சித்தர்கோடி
கூர்ப்பானவயதிருபத் திருநூறப்பர்
தேடினல்வளர்த்திமுழம் நாற்பதாகுஞ்
சித்திக்குமேருவுக்கு வடக்கேகேளு
நாடினல்வளர்த்தியது நானூறாகும்
நலமானமூன்றுதிசை சித்தருக்கு
ஊடினார்கிழக்கதிலே வுரைக்கக்கேளு
வுத்தமனேவளர்த்தியது நாநூறொண்ணே. ௭௭
நூறுகும்வயத்துதான் முன்னிரட்டி
நூதனமாயிருப்பார்கள் கோடாகோடி
பேறுகுந்தெற்கிலுள்ள சித்தரெல்லாம்
பெருமைமெத்தப் பெருமைமெத்தப்பேசப்போகா
ஆறுகு: நாலுதிசை சித்தருக்கும்
அடையாளமென்னுடைய காஷாயமாகும்
வீறுருஞ்சித்தருக்கு மகுத்துவந்தான்மெத்த
மெஞ்ஞானிசொரூபமடா விரைந்துபாரே. ௭௮

பூசைவிதி-பிராணயம்.

விரைந்துகற்பமுண்ணயிலே முடிவளர்க்கவேண்டாம்
விடிவேருபல்விளக்கி நாக்குத்தேய்த்து
திரைந்துவரும்வழலைசுத்தி மூன்றுஞ்செய்து
திருநீற்றையுற்றளமா டணிந்துகொண்டு
பரந்தஅங்கன்னியாசம் கர்னியாசம்
பரிவானசடங்கம்து பிராணயந்தான்

உரந்துவருங்காயரிசற் பணமுமோமம்
உருவேற்றுமட்டகர்பஞ்சிவபூசையாமே. ௭௯

புத்தி.

பூசையிலேவைத்தெடுத்துக் கற்பமுண்ணு
புகழாகச்சித்திக்கும் பேறுண்டாகும்
ஆசையிலேபேரின்ப மடுத்தாயாகு
லற்பமனதின்மாய்கை நீக்கிப்போடு
வேசியைப்போலாசைகொண்டா லெல்லாப்போச்சு
வேதாந்தம்நீயென்று லொருமனதாய்நில்லு
காசில்லையென்றுசொல்லி விட்டிடாதே
கற்பமுண்டால்வாதசித்தி கைக்குள்ளாமே. ௮௰

சுத்திமார்க்கம்.

கைக்குள்ளாய்வாதசித்தி வருகவென்றால்
கருவையெல்லாஞ்சொல்லுகிறேன் கனிந்துகேளு
வெய்க்குள்ளாயைம்பதுக்குள் சொன்னேமுப்பூ
வெளியாகச்சொல்லிவிட்டேசுத்தியில்லை
முக்கியமாய்சுத்திதனைச் சொல்லுக்கேளு
முப்பத்திரண்டென்று கொங்கணர்தான்சொன்னார்
தெர்க்கிலேசொல்கிறேன் நீகேளுகேளு
சுத்திடசுப்பிரத்தைச் சுருக்கித்தானே. ௮௧

முப்பூசுத்தி.

சுருக்கியேசொல்லுகிறேன் முப்பூவப்பா
தூக்குவகையொன்று பலமொன்றாகச்
செருக்கியேபனிவிளைக்த நீரைவாங்கித்
தெளித்துநீவைத்திடுவாய் வெவ்வேறாக
நெருக்கியேவெய்யிலிலே காயக்காய
நேராகவொன்றுக்குப் பத்துநாள்தான்
தருக்கியேவகையொன்றுசலம்படிதானொன்று
தாக்கியேவெய்யிலிலே காய்ந்தபின்னே. ௮௨

காய்ந்ததின்மேலின்னமொரு சுத்திகேளு
காசினியில்முரியினால் முன் பாற்காச்சு
வாய்ந்தபின்பு தேசியின்னீர் தன்னில்முன்போல்
வளமானசாரநீர் தன்னில்முன்போல்
எய்ந்தபின்புமுப்பூவு மொன்றாய்ச்சேர்த்து
யிதமானகிளிஞ்சிநீர் படிதான்வாங்கி
பாய்ந்திடவேபத்துமுறை தெளித்துநீயும்
பரிவாகவற்றவற்றத்தெளியக்காச்சே. ௮௩

வெடியுப்புச்செய்நீர்.

காச்சியபின்இன்னமொரு கருவைக்கேளு
கனமானவெடியுப்புப் புளியுங்கூட்டி
வாச்சுதேயிடித்துநன்றாய்த் தீயைமூட்டு
வளமாகநீற்றியதைச் சுண்ணம்பாக்கிப்
பாச்சுவாய்காலிலொன்று சாரந்தானும்

பரிவாகப்பொடித்துநன்றாய்ப்பனியில்வைக்க
ஆச்சியாஞ்செய்நீரா மந்நீர்தன்னை
அரைப்படிதான்வாங்கிவைத்து அறையக்கேளே ௮௪

முப்பூச்சுண்ணம்

கேளப்பாவீரமொடு பூரஞ்சீனம்
கெடியானவுரமுடனே குருவண்டுநாபி
சூளப்பாவகையொன்று கழஞ்சியொன்று
சூட்டியேபொடித்தந்த நீரிற்போட்டு
நாளப்பாயிருந்துடனே சிவந்துபோகும்
நலமானசெயநீரில் போட்டுக்காச்சு
தேளப்பாகொட்டியதோர் சுண்ணமாச்சு
திடமாகயிடைக்கிடைதான் சூடன்சேரே. ௮௫

சூடச்சுண்ணம். சூடனுக்குநேர்பாதி வீரங்கூட்ட
சுகமானபுழுகதிலே கழஞ்சிகூட்டி
தேடுகின்றவெடியுப்பு நீராலாட்டி
சிறப்பாகவில்லைசெய்து ரவியிற்போடு
நாடவேகாய்ந்தபின் வோட்டில்வைத்துமூடி
நலமாகச்சந்துவாய் சீலைசெய்து
போடவேமுழப்புடத்திற் சுண்ணமாகும்
போகத்திலேசொல்லுகிறேன் புகழ்ந்துபாரே. ௮௬

துரிசிச்சுண்ணம்.

புகழான்சுண்ணத்தில் மஞ்சாடிவாங்கி
பூசுவாய்துரிசிக்கு வாய்நீராலே
சுகமானவெய்யிலிலே காயவைத்துச்
சொல்லுகிறேன்பூநீற்றில் சீலைசுற்றி
யகமானவோட்டில்வைத்து வோடுமூடி
யப்பனேசந்துவாய் சீலைசெய்து
முகமானமூன்றெருவில் புடத்தைப்போடு
முக்கியமாய்நீறும்பின்னெடுத்துக்கொள்ளே. ௮௭

தாளகச்சுண்ணம்.

எடுத்ததொருதுரிசிநீர் வேகமெத்த
வென்சொல்வேனிரதத்தைச் கண்ணிக்கொல்லும்
அடுத்ததொருதுருசிநீர் வீரங்கூட்டி
அழகானதாளகத்தி லப்பிப்போடத்
தொடுத்ததொருபுடத்தினிலே வெளுத்துநீறுஞ்
சுகமானவுபசரங்க ளீயமாகுங்
கொடுத்திடவேபத்தரையுந் தப்பாதப்பா
கோடானகோடிகவ ராடும்பாரே. ௮௮

நூலின்பெருமை.

ஆடியதோர்முப்பூவின் கருவையெல்லா
மறைப்பற்றுச்சொல்லிவிட்டே னலையவேண்டாம்
தேடியதோர்கருக்களெல்லா வெளியாய்ப்போக்க

செகத்திலேகிட்டுகிலோ சித்தராச்சு
மூடியதோர்கருவெல்லாந் துறந்தேனென்று
மோசமென்றிந்நூலையொளித்திட்டார்கள்
நாடியேநானெடுத்துப்பாவநாச
நற்றீர்த்தக்கரை தனிலே வைத்திட்டேனே. ௮௯

நூல்வந்தவழி.

வைத்திட்ட நூலெடுத்தா னொருவேளாளன்
வந்துதடாயிப்படித்தா னுலகத்துள்ளே
வைதிட்டமானபல வின்தநூல்தான்
கசடருக்கும்பசுகளுக்குக் காணாதோடும்
பொய்த்திட்டசாத்திரங்க ளெல்லாமெய்தான்
போக்கறியவிந்நூலைப் பேணிப்பாரு
மெய்திட்டகருவெல்லாந் தோயுந்தோயு
மீசானுந்தேவியுந்தா னிலைறஞ்சுவாரே. ௯௰

சவுக்காரவைப்பு.

இறைஞ்சுவார்சவுக்கார வைப்பக்கேளாய்
யியலானஉவருப்பு அமரியுப்பு
மறைவ னகல்லுப்பு வெடியுப்போடு
மருவியதோர்கல்லாணைக் கிளிஞ்சிச்சுண்ணம்
நிறமான சூதனொடு பாறையுப்பு
நேராகச்சட்டமுனி கொங்கணர்தான்சொன்னார்
குறையாமலம்முறைக்கு வைத்துகொண்டு
கூசாமல்சட்டமுனி சொன்னமார்க்கம். ௯௧

சொன்னபடி யெண்ணைதனைக் கழற்றிப்போடு
சூட்சமாய்க்கடுங்காரமேற்றியேதான்
நன்னயமாய்கல்லுப்பைக் கட்டிக்கொண்டு
நலமானவித்தையெல்லா மாடிப்பாரு
பொன்னதிலேயுண்டாகுங் குளிகைகட்டி
பொதிகைதனில் வந்தென்னைக்கண்டுசேவி
யின்னமொருசேதியுண்டு சொல்லக்கேளு
யிதமானலறுசுவையுங் கழற்றுவாயே. ௯௨

சுந்தரானந்தர்முறை-கற்பம்.

கழற்றுவாய்சுந்தரன்றந் நூலைப்பார்த்துக்
கடுக்காயைக்கொண்டுவிடு வருஷமொன்று
தளத்துடனேமிளகுதன்னைக் கொண்டாயானால்
சடத்திலுள்ளநோயெல்லாந் தானேபோச்சு
சுற்றுகின்றநூல்களெல்லாஞ் சுருக்கிச்சொல்வேன்
றுடியானவல்லாரைக் கற்பத்தேதான்
யிளைத்துநீபோகாமல் வருடங்கொண்டா
லிருந்துமடாயிருநூறுண் டிருந்துகாணே. ௯௩

குளிகைசெய்கை

ஆண்டிருக்கச்செய்துகொண்டு வயக்காந்தத்தை
யப்பனேகொண்டுவிடுவருடமொன்று

பூண்டிருக்கும்பிதகுகொள்ளு கற்பமெல்லாம்
புகழாகமுப்பூவை முடித்துக்கொண்டு
என்றதொருவேதைதனைக் கண்டுகொண்டு
யிதரமென்றஆனைதனைக் குளிகைசெய்து
மூன்றதொருகுளிகைக்குச் சாரணைதான்றீர்க்கு
முன்பாகத்தங்கமொடு சூதங்கூட்டே. ௧௪

இரசச்செந்தூரம்.

கூட்டியேகெந்திதனைக் குப்பிக்கேற்றி
குலாவியேசெந்தூரம் செய்துக்கொண்டு
நாட்டியேவருடமென்று கொண்டாயானால்
நமனில்லைகோடிவரை யிருத்தம்பாரு
பூட்டியேவாசிதன்னைக் கூட்டிக்கொண்டு
புதுமையுள்ளமலைமேலே யேறியேதான்
ஆட்டியேமலையினுள்ள கற்பங்கொள்ளு
அதிகமாய்ரிஷிகளைநீ தெரிசித்தேதான். ௧௫

சித்தரைக்காணதியானம்-அடுக்கும்வகை.

தெரிசிக்கத்தியானமொன்று சொல்லக்கேளு
சிவாயநமஓம்கிலீம் என்றுசேவி
வரிசிக்குஞ்சித்தரெல்லாம் வெளியிற்கானு
மகத்தானசித்தரப்பா வணங்கிநில்லு
பரிசிருக்கும்படியவரைக் கண்டாயானால்
பணிந்திடுவாய்பாதத்திற் சிரசுதட்ட
கிரிசிக்கும்ஆர்நூலில் சார்ந்தாயென்று
கேட்கிலகத்தீசுரர்தன் கிருபையென்னே. ௧௬

சித்தர்மகத்துவமளித்தல்.

என்னுடையபேர்சொல்லில் கூட்டிக்கொண்டு
யிசையானபொதிகையிலே யேறுவார்பார்
உன்னுடையதிறங்கண்ட போதுதானே
யுறுதியுள்ளசித்தனென்று பேருமீய்வேன்
மின்னுடையவொளிகாட்டி மறுதலமுங்காட்டி
மெஞ்ஞானவீடுபெற நிலையுங்காட்டி
பன்னுடையசிதம்பரமு மேருபூசைப்
பாலிப்போமஷ்டாங்கம்பரிந்துகாணே. ௧௭

யோகிகளுக்கிருப்பிடவிசேடதலம்.

பரிவானயோகிக்குத் தலத்தைக்கேளாய்
பகருவேன்காசிவரை கன்னிமட்டுந்
தெரிவானமலைச்சார்பு மெத்தநன்று
தேசத்தில்நாடதிகஞ் சோளதேசம்
அரிதானபாண்டியிலே வைகைநாடு
அடுத்ததொருகள்ளர்பத்து அழகர்கோவில்
உரிதானதிண்டுக்கல் காளையார்கோவி
லுறவானமதுரையொடு குன்றூருமே. ௧௮

ஆறான தாம்பிரவேணி கரைப்போக்கெல்லா
மாமடாவெகுசித்தி பொதிகைசார்பு
கூறானசிதம்பரமுங் காவேரிபோக்குங்
கொள்ளுகிறகற்பமெல்லாஞ் சித்தியாகும்
நாறானகன்னியிலே குமரிநின்றாள்
நற்பனமாய்வாலையடா அவள்தானப்பா
பேறாகும்நான்சொன்ன தலங்களுக்குப்
பேதமில்லைப்பேதமுண்டு பேசுகிறேனே. ௯௯

பேதபூமி. பேசுவதுசமுத்திரத்துக் கப்பாற்பத்துப்
போனகடிகையது மேற்கேசென்று
வீசுறதோர்கற்பங்க ளுண்ணவேணும்
மெஞ்ஞானிகளெங்குமாம் வேகாநதிக்கும்
ஆசுறதோர்த்தமதிகம் நிலமதிகம்பாரு
அப்பனேகுளிர்ந்ததவ மாகுமாகும்
கூசுறதோரென்னவென்றால் ராசநீதங்
குவலயத்தில்மனுநீதங் கொள்கைபாரே. ௱

புத்தி.

பாரப்பாசமாதியிலே யிருக்கும்போதும்
பலபலவாந்தொருல்முறைகள் செய்யும்போதும்
நேரப்பாபலகூட்டங்கூடலாகா
நெறிகெட்டசீடர்களைச் சேர்க்கலாகா
ஆரப்பாதனியேதா னிருந்துக்கொண்டு
அளவறந்தவித்தையெல்லா மாடுமாடுஞ்
சீரப்பாதேகசித்தியோகசித்தி
செயமானமலைகளிலே சேர்ந்துகொள்ளே. ௱௧

பூமிஞதம்விளைபூமி.

கொள்ளென்றகுமரிக்கு மேற்கேகேளாய்
கூறுவேன்பதிங்காதங் குணமாம்பூமி
விள்ளென்றபூமிதனிற் பூமிஞதம்
விரைந்தெடுக்குந்தலங்களையான் விரித்துச்சொல்வேன்
புள்ளென்றகாசிக்குந் தெற்கேபத்து
வுறவானகடிகைக்குட் பூமியொன்று
வெள்ளென்றபூமிக்குங் கிழக்கேதானு
மிருபதுநாழிகைக்குள்ளே தலமொன்றுண்டோ. ௱௨

முண்டப்பாமுன்சொன்ன தலத்துக்கப்பால்
யோசனைதானொன்றுசென்றால் தலமொன்றுண்டு
நன்றப்பாவதின்பிறகு மேற்கேசென்றால்
நலமானகடிகைபத்து மலைச்சார்புக்குள்
சென்றப்பாபார்த்தாக்கால் தலமொன்றுண்டு
சித்தருநடமாட்டஞ் சொல்லல்போகா
இன்றப்பாசொல்லுகிறேன் விராடப்புரந்தன்னிற்
வெகுவீதியொருதலந்தான் விசாலமெத்தலாமே. ௱௩

**தலவிசேடமகத்துவம்.**

மெத்தவடாடில்லிக்குமேற்கதாக
விருதானதலங்களுண்டுமேவிப்பாரு
சித்திரப்பாகஞ்சமலைச்சித்தர்வாழ்க்கை
திரண்டதொருமலையுண்டுவதற்குளப்பா
வுத்தமமாங்குருநாட்டில் ஞாலந்தானென்று
வுயர்ந்தமலையடிதானேசித்தருக்கு
வெற்றியுள்ளகன்னடியர்தேசந்தன்னில்
மேலானவயிந்தங்கர்தலந்தானென்றே. ௱௪
தலமான ஆற்காட்டின்தெற்கேபத்து
சாந்தக்காலங்கனேறலமொன்றுண்டு
பெலமானகாவேரிபூமிதன்னில்
பெருத்ததொருதலமொன்றுசீரங்கத்தில்
நிலமானகோகாணத்துக்கப்பாலேதான்
நெடுந்தூரஞ்சென்றக்கால்தலமொன்றுண்டு
குலமானதிண்டுக்கல் தேசந்தன்னில்
குணமானதலமொன்றுகூர்ந்துபாரே. ௱௫
கூர்ந்துபார்கள்ளருடதேசந்தன்னில்
குணமானதலமொன்றுவள்ளலூரில்
சேர்ந்துபார்மதுரைக்குத்தெற்கதாகத்
திறமானகடிகைபத்துக்கப்பாலொன்று
ஏர்ந்துபாரதுக்கப்பால்கடிகையைந்து
யெல்கயிலேதலமொன்றுயிருக்குப்பாரு
தீர்ந்துபார்மதுரைக்குக்கிழக்கேயப்பா
சேர்ந்துபத்துக்காதத்துக்கப்பாற்செல்லே. ௱௬
செல்லவேவளையல்செய்யும்பேர்களுண்டு
செயலானதலமதிகஞ்சேர்ந்துபாரு
மெல்லவேயதின்கிழக்குமலவர்நாட்டில்
வெகுதலங்களுண்டுசமுத்திரம்வரைக்கும்
நல்லதொருகல்லுப்புக்கடலிலுண்டு
நலமானசமுத்திரத்தின்ஸ்ரீராமர்பிரதிஷ்டை
வல்லதொருநாட்டுக்குள்தலமொன்றுண்டு
மைந்தனேதாம்பிரவேணிவளமைகேளே. ௱௭

**ஆற்றின்கரைபூமிவளமை.**

வளமையாமாற்றினிடகரைபோக்கெல்லாம்
வாகானநாலாறுதலங்களுண்டு
இளமையாமதின்தெற்குக்குமரிவரைகேளாய்
ஏழுதலமுண்டப்பாவதற்குமப்பால்
பழமையாங்குறவருடதேசந்தன்னிற்
பதிவானதலமுண்டுகிட்டக்கிட்ட
உள்ளமையாந்தலங்கள்ரொம்பயிதல்லாமல்
உறைப்பானபூவெல்லாமுற்றுப்பாரே. ௱௮

சலாத்து-பொன்னப்பிரகம்-வெள்ளைப்பிரசபூமி.

பாரப்பாசலாசத்துவிளையும்பூமி
பரிவானகுமரிக்குங்கிழக்கதாக
நேரப்பாகாதமதுபத்துச்சென்றால்
நிலத்திலேவெட்டியேயெடுப்பார்பாரு
சீரப்பாபொன்னென்றவப்பிரகந்தான்
தென்காசிக்கடுத்ததிலேதலந்தானென்று
வேரப்பாவெள்ளையென்றவப்பிரகந்தான்
ரிதிசதுரகிரிக்கடுக்கவிளையும்பாரே. ரகூ

பொன்னிமிளை-மூவிலைகுருந்து-சோதிவிருட்சம்-வெண்சாமரை

விளையுமடாகிழக்காகக்காதமொன்றில்
வெகுவிதமாம்பொன்னிமிளைவிளையும்பூமி
தளையுமடாபொதிகைமலைச்சார்புதன்னில்
தாம்பிரவேணிக்கரையிலருவியாற்றில்
முளையுமடாவதனடுத்ததெற்கேகாத
மூவிலையாங்குருந்துதான்பரமுண்டாகுந்
தளையும ரவதினடுக்கச்சோதிவிருட்சந்
தன்னோடுவெண்சாமரைதானுமுண்டே. ரய
உண்டடாபச்சையாறதனிலப்பா
யுத்தநம்பிவாசமலையுயர்த்திமெத்த
நன்றடாவதினுடையகரையிலேதான்
நாலாறுமரமநிற்கும்வெண்ணாவலப்பா
கொண்டடாவப்மலையில்சித்தர்கூட்டங்
குறையாதுவொருநூற்றுப்பத்துப்பேர்கள்
கண்டடாவம்மலையில்விருட்சமூலி
கனமடாசித்தரால்காணொணாதே. ரயக

நீலக்கொடிவேலி-சங்கிலிசித்தர்வாசம்.

காண்போர்களம்மலையிற்கிணறொன்றுண்டு
கருநீலக்கொடிவேலிக்கரையிலுண்டு
வீண்பேர்கள்போனக்கால்காணாதப்பா
விருதுபெற்றசித்தர்காண்போகவேணுந்
தாண்பாமையேந்திரமாமலையிலேதான்
சங்கிலிச்சித்தருண்டுகொங்கணர்தன்பிள்ளை
ஊன்பேர்களபோனக்காலேறப்போகா
யுறப்பானகெவுனிக்குயேறலாமே. ரயஉ

வெண்சாமரைவாழுமிடம்-வெண்சாமரையைக்காணுமிடம்

ஆகுமேதாடகைதனசுனைதானென்று
அதில்வாழும்வெண்சாமரையஞ்சாறுண்டு
போகுமேயச்சாரைமயேந்திரமலையெல்லாம்
போக்குவரத்தாயிருக்குப்பூண்பார்சித்தர்
ஏகுமேயம்மலையிலேறிச்சென்று
லியல்பானசுனையருகில்மண்டலந்தானென்று

வாகுமேதானிருக்குப்போதுதன்னில்
வகுத்ததிலேகாணலாஞ்சாரைதன்னை ௱௰௩

சாரைபிடிக்குமுறை-வெண்சாரையருந்தல்.

தன்னையேகண்டவுடன்ரம்பித்தேதான்
சார்வானநடுமையம்பிடித்தாயானால்
பின்னையேபிடித்தவிடங்கையிலிருக்கப்
போகவிருதுண்டாய்பொருந்திப்போகும்
மின்னையேகையிலிருக்குமதனைத்தின்று
விருபதுனாயிரவருடமிருந்தும்பாரு
பொன்னையேதேடாதேகற்பந்தேடு
பொருள்காணப்புருவமையம்நோக்கிப்பூணே. ௱௰௪

சதுரகிரிமகத்துவம்-பொன்மலைமகத்துவம்

பூணப்பாமயேந்திரத்திலேறித்தெற்கே
போக்கானால்நாழிகைதான்பொன்மலைதானுண்டு
ஆணப்பாலதனிலொருகுகையுமுண்டு
வதிலிருப்பாராயிரம்பேரதிகசித்தர்
காணப்பாஅவர்களைத்தான்கண்டாயானால்
கனமதுகேட்டதெல்லாங்கையிலீய்வார்
நாணப்பாகெவுனமென்றகுளிகையீய்வார்
நலமானகற்பமதுநல்குவாரே. ௱௰௫

தாட்கைசுனைமகத்துவம்.

நல்குவாரம்மலையினுதகமுண்டு
நலமானதயிலமுண்டுபாஷாணமுண்டு
செல்குவார்மூலிகைதான்கோடியுண்டு
திரவியங்கள்கிடாரத்திலிருப்பதுண்டு
புல்குவார்தாடகையிற்கிழக்குராவில்
புதுமையென்றுசொல்லுகிறேன்பிழைக்குப்போக்கு
வொல்குவாரடையாளமுரைக்கக்கேளு
வோராளுக்குயாவொருகையில்துறட்டிதானே. ௱௰௬

தயிலமிருப்பிடம்-தயிலமொடுக்கும்விபரம்.

கையிலொருதுறட்டிதனைக்கண்டாயானால்
காணப்பாவதினருகேகல்லிற்பூண்டு
சியலொடுசித்தரையுமங்காளிற்றான்
சென்றாக்கால்தயிலமதுசிவந்துபாயும்
நயமாகவதினடுக்கக்கற்குழிதானென்று
நலமாகவதிற்றயிலஞ்சென்றுபாயும்
மயமாகுந்தயிலஞ்சித்தாகொடுப்போமுன்னே
மைந்தனேகாத்திருந்தெடுத்துக்கொள்ளே. ௱௰௭

தயிலம்வைக்கப்பாத்திரம்-தயிலவுதகதயிலமகத்துவம்.

கொள்ளுவதுபேச்சுரையின் குறிக்கைதன்னில்
கொள்ளமட்டுமடைத்ததனைக்கொண்டுபோய்நீ
விள்ளுகிறேன்காசிடைதானுள்ளேகொள்ளு

மேன்மையாமண்டலத்திற்சரவுபோச்சு
தள்ளுவதுசட்டையதுவெல்லாந்தள்ளுஞ்
சயிலவுதகமென்றதயிலமப்பா
எள்ளவுமிரும்பிலேதடவிப்போட
யேமமொன்றவித்தையதுகைக்குள்ளாச்சே. ௱௰௮
மயேந்திரமலைவளப்பம்நெல்லியிடம்-வாலரசமிருக்குமிடம்.
உள்ளானமயேந்திரமாமலைக்குத்தாழ
ஒருபிறமாம்வடபக்கந்தன்னிலேதான்
கல்லான்கல்லிலேகுகைதானுமுண்டு
கருநெல்லியதனிலேயொருமரந்தானுண்டு
தள்ளாதகுகைதனிலேகற்பரணிதானு
தயிலமுண்டுவுதகமுண்டுதனந்தானுண்டு
விள்ளாதவாலரசமொன்றதாகும்
மேலானபரிசனமாமவேதையாமே. ௱௰௯
நம்பிமலைவளம்-சோதிவிருட்சம்-செங்கற்றாழை.
ஆமென்றநம்பிமலைவடச்சார்புதன்னி
லதிகமாஞ்சோதியது ஆல்போல்நிற்கும்
வாமென்றவதின்றுமேசெங்கற்றாழை
வரிசையாய்நிற்குமடாயிரத்தலர்னம்
போமெனறகாயசித்திக்கேத்தகற்பம்
புதுமையின்னஞ்சொல்லுகிறேன்பூண்டுசேரு
தாமென்றபொதிகைக்குக்கிழக்குச்சார்பில்
தாண்டியொருநாழிகைதான்மலையிற்சென்றால். ௱௨௰
சிவத்தவிலைகுளிகை-செந்திராய்-சுணங்கன்மூலி.
சென்றிடவேயவ்விடத்தில்சுனைதானொன்று
சிவந்ததொரு இலைகள்ளிசெந்திராயும்
கன்றிடவேயுண்டாகுஞ்சுணங்கன்மூலி
காயசித்திக்கேத்தகற்பங்களைக்கவுண்டு
பண்டுடையகற்பத்தைக்கண்டோர்க்குப்
பரிவானகாயசித்திசெவுனசித்தி
யென்றுமேவாதசித்தியெய்தியெய்து
மிறைவனைப்போலேநாளுமிருந்துபாரே. ௱௨௧
நறைதிறைபாறத்தயிலம்.
இருந்துகின்றதயிலமொன்றுஇயமபக்கேளாய்
இயலானகடுக்காய்வோத்தயிலம்நாழி
வருந்துகின்றநெல்லிக்காய்த்தயிலம்நாழி
வளமானதாணிக்காய்த்தயிலம்நாழி
திருத்துகின்றகருந்துவரைத்தயிலம்நாழி
சேங்கொட்டைவித்திலுடதயிலம்நாழி
பொருந்துகின்றபழஞ்சிவிரைதயிலம்நாழி
புகழானவேம்பின்றோல்தயிலம்நாழி. ௱௨௨
நாழியென்றசிவன்வேம்புத்தயிலம்நாழி

மாநலங்காரெள்ளுத்தயிலம் நாழி
வாழியென்றவாளுவைத்தயிலம்நாழி
வளமானவகையெல்லாந்தயிலம்வாங்கி
தாழியென்றபீங்கானும்பாண்டத்துள்ளே
சாதகமாய்விட்டுமொருசேதிகேளு
காழியென்றதயிலமதிலோகங்காந்தம்
கருதியதோர்செந்தூரங்கலந்துகொள்ளே. ௱௨௩

மலையேறபக்குவம்-தயிலத்துக்குப்பத்தியம்.

கலந்ததனைநெல்லுக்குள் மண்டலந்தான்வைத்து
கணபதியைப்பூசித்துக்காசிடைதான்கொள்ளு
மலந்தொருமண்டலந்தானகொண்டாயானல்
வளர்கின்றநரைமாறிவண்டுபோலாம்
நலந்திகழுந்தேகமதுசிவந்துகாணும்
நாட்டுக்குளதிகரிதுநாட்டிப்பாரு
பலந்தருங்காணித்தயிலஞ் செய்துக்கொண்டு
பாரிக்குமலைமேலே யேறுயேரே. ௱௨௪
ஏறுவதுவெப்படிதா னென்றாயானல்
விடும்பென்றஆணவமு முனிவுந்தீர்ந்து
கூறுகின்றகொலைகளவுங்காமப்பொய்யுங்
கொடுமையென்றபாவங்கள் தன்னைத்தீர்த்து
மாறுகின்றமனந்தூரந்துநிராசையாகி
வளமாகப்பச்சரிசிபொங்கியேதான்
தேறலதுபால்கூட்டிச்சிறுபயறுக்கூட்டிச்
செயமாகவோர்வேளையமுதுகொள்ளே. ௱௨௫

வாசிகுறி. கொள்ளயிலேயிடைகலையில்வாசிபாரு.
கூசாமல்நெட்டோடேயேறுயேறு
தள்ளையென்றவாத்தாளைநித்தம்பூசி
சாயுச்சியபதத்தைநித்தம்சார்ந்துநில்லு
வள்ளையிலேயிதுவெல்லாமகிழ்ந்துபாரு
மகத்தானபூரணமுமானதிற்றோன்றும்
பிள்ளையிலேவுங்களைப்போல்பிள்ளையுண்டோ
பேய்மக்காளலையாதேபிலத்துக்கோவே. ௱௨௬

பசுபதிபாசம்-புரியட்டம்.

கோவென்றபசுவொன்றுபதிதானென்று
கூறுகெட்டபாசமொன்றுமூன்றுங்கூட்டித்
தேவனென்றபிறப்புக்குஇடமுண்டாச்சு
சித்தனென்றாலிதைத்தள்ளிசிவயோகஞ்சேரு
ஆவென்றவகையில்லையென்றுசொல்லி
யலையாதேயிந்நூலிலடுத்தசித்தி
பூவென்றஆயிரத்தெண்மலரப்பூவைத்தான்
போத்தியேதீர்ட்டப்புரியட்டப்போமே. ௱௨௭

பசியூதிருக்க. போமென்றபுரியட்டமெட்டிலைப்பா

போகாமலடங்கினல்பிறவிபோச்சு
சாவென்றசொல்லேதுலபிதானேது
சாயுச்சியமானதொருஞானவானே
யாவமன்றவமுதமதுவுண்டாயானு
லப்பனேபசிபோச்சுச்சித்தியாச்சு
நாமென்றவாணவமுமப்போபோச்சு
நலமானசிவசித்தன்ஞானியாமே. ௱௨௮

தேகவாசனை.

ஞானியென்றுவொருகலையில்காய்த்ததோசொல்
நரசென்மங்கோடியிலேயொருவனப்பா
யோனிவாய்பட்டசடமாகையாலே
யுத்தமனேகாயசித்தியாசவேணும்
ஊனென்றதேகமதுகற்பதேக
முத்தமனேகயிலாயதேகமானல்
மானிலத்தின்மனிதனல்லதேவனச்சு
மைந்தனேயற்பமடாமனிதர்வாழ்வே. ௱௨௯

பூநீற்றுக்கரு.

வாழ்வேயின்னமொருவரிசைசேளு
வளமானபூநீற்றைவாரிக்கொண்டு
தாளவேசாறுவார்த்தழைகளெல்லாஞ்
சாதகமாய்ப்போட்டிடவேதண்ணீராகுஞ்
சூழவேகாரத்தைச்சிறுநீருப்பில்
தோய்த்திடவேகாரமதுசுண்ணமாகும்
கூறவேசாறுகளில்போட்டுச்சற்றே. ௱௩௰

பாஷாணக்கட்டு.

சத்தானசாறுவகைசொல்லக்கேளு
சம்பீரச்சாறுதான்படிதானொன்று
வித்தான்முன்சொன்னகுருவகைதானென்று
விளங்கவேவ்வகையொன்றுவாரகனென்று
முத்தாகப்போட்டதனைக்கலக்கிவைத்தால்
முறிந்துமேயொருநாளில்தண்ணீராகும்
பத்தானதெளிவதனையிறுத்துக்கொண்டு
பாஷாணங்கழஞ்சுக்குச் சுறுக்குப்போடே. ௱௩௧

அயமணி.

போட்டிடவேபாஷாணங்கட்டிப்போகும்
புகழானசெம்பிலிடவெள்ளியாகும்
ஆட்டிடவேயரைப்பொடியில்விட்டரைத்து
அளவாகவுணந்திடவேமணியுமாகும்
நீட்டியதோர்சங்கமதிற்சேர்த்துருக்கி
நிசமாகவெள்ளிசெம்பிநீயந்தாயானல்
நாட்டிடவேயாறேழுவரைக்குங்காணும்
நலமானஇரும்பிலிடவேதைதானே. ௱௩௨

பிரம்பிரவேதை.

இரும்பைவிட்டுச்செம்பதனைச்சொல்லக்கேளு
எழுத்தாணிபச்சிலையின்சாறுநாழி
முருங்கையுடபட்டைச்சார்நாழிகூட்டி
மூந்தினதோர்குருவகைக்குவராகன்போடு
அரும்பவேயறுபதுநாழிகைநடந்தார்
லதனுடையதெளிவதனையிறுத்துக்கொண்டு
துரும்பானசெம்பதனை யுருக்கிச்சாய்த்தால்
சுகமாகவீரஞ்சுதய்யனுமே. ௱௩௩

பாஷாணக்கட்டு

துய்யானிலிடைக்கிடைதான்சேர்த்தாயானால்
துய்யனுஞ்சொல்லரிதுசொல்லிவிட்டேன்
மெய்யாகச்சொல்லுகிறேன்சதிரக்கள்ளி
விதமானபாலதனைக்கறந்திலந்து
அய்யாகேள்முன்குருவில்வராகன்போட்டு
அறுபதுநாழிகையிருக்கத்தெளிந்துபோகும்
உய்யவேயொருகழஞ்சுவெள்ளையப்பா
வுழக்குநீர்சுருக்குடுக்கக்கட்டிப்போமே. ௱௩௪

நாகக்கட்டு. போகின்றபாஷாணந்தன்னைவாங்கி
புக்கிடவேகஞ்சுக்குபஞ்சாடித்தான்
ஆகின்றநாகமதுகட்டிப்போகும்
அந்தஇடைதங்கத்தையதனிற்றூக்கி
ஏகின்றவெள்ளிசெம்பிலீய்ந்தாயானால்
யேழரையாமிதன்பெருமையியம்பப்போமோ
வரகுடையவழரியதுப்படி தானென்று
மைந்தனேமுன்குருவும்வராகனென்றே. ௱௩௫

சூதகக்கட்டு.

ஒன்றாகபோட்டதனை வைத்தாயானு
லுத்தாலேனகல்மசந்தானுரைந்தகானும்
பன்றாகத்தெளிவித்தார்த்திற்குக்த
பாலையாமரசமதுதானட்டைப்போலாம்
நன்றாகவதையெடுத்துக்கருவூமத்தை
நலமானகாயதனிற்புடத்தைப்போடு
வென்றாகபோர்புடந்தான்கோழியாகும்
விதமாகக்கட்டிப்போம்வெள்ளியாமே. ௱௩௬

சூதச்செந்தூரம்.

வெள்ளியென்றசூதத்தைத்தின்றாயானல்
வெள்ளையென்றநறைகளெல்லாம்வண்டுபோலாந்
தெள்ளியதோர்தங்கமிட்டுச்செந்தியிட்டு
செந்தூரஞ்செய்திடவேசொர்ணமாகும்
வள்ளியதோராசவெள்ளிகெவுனமாகு
மப்பனேசாரணையைத்தீர்ந்தபோது

உள்ளியென்றகாட்டுள்ளிபிடித்துக்கொண்டு
வுத்தமனேமுன்குருவைப்போட்டிடாயே. ௱௩௭

வெள்ளீயம்நீர்வாங்கல்.

போட்டதனைப்பிழிந்திடவேகண்ணீராகும்
புகழானமுன்குருவைப்பின்னுமிட்டு
ஆட்டிதனையுலத்துவைக்கத்தெளிவதாகும்
மத்தெளிவில்வெள்ளீயமுருக்கிச்சாய்க்கப்
பூட்டிதனைப்பத்துமுறைசாயந்தாயானால்
புகழாகக்கட்டிப்போம் பூண்டுபாரு
நாட்டதனில்றசங்கட்டுஞ்சுருக்குபோட
நலமானகுளிகையதுதெவுனமானே. ௱௩௮

லிங்கக்கட்டு.

ஆமப்பாமுன்குருவையிலைக்கள்ளிபாலில்
அப்பனேயிட்டுவைக்கத்தெளிந்துபோகும்
வேமப்பாவன்னீரில்சாதிலிங்கம்
விதமாகச்சுருக்கிட்டேகட்டிப்போகும்
நாமப்பாவெள்ளியிலேவேதயாகும்
நலமானதங்கத்திற்சேர்ந்துஆடும்
ஓமப்பாயிக்குருவையண்டத்துள்ளே
யுருக்கவேகைக்குக்கால்வாகன்போடே. ௱௩௯
போட்டிதனைவாயில்வைக்கமெழுகாகும்
புகழானபாஷாணமெல்லாஞ்சாகு
மீட்டிலாழுள்ளலோகமெட்டில்வேதையாகும்
இதுபோலச்சுருக்குள்ளபோக்கொன்றில்லை
நாட்டமுடன்இக்குருவைவைக்கவேண்டாம்
நலமானபச்சையடாபூனீர்ச்சுண்ணத்
தேட்டமுடனித்தொழிலைமுன்னேசெய்து
செயமானலோகத்திலிருந்ததேறே. ௱௪௰

வினயகத்தில்.

தேறுதற்குபின்னமொருகருவைக்கேளு
செப்பாதகருவையெல்லாஞ்செப்பினேன்கேள்
யேறுதற்குயிலையொன்றுமில்லையப்பா
யிரைந்துநீபிறவாதேயிறவாதேநீ
கூறுவதுசத்தியமேபொய்யாகாது
கொலையொன்றுமாகாதுகொடுமைவாகா
வேறுதுறையேயில்லைவழிலையாதி
வேதாந்தகுருவுக்குமனமதாமே. ௱௪௧

தீக்ஷபிரண்டுக்குங்காலம்-சூரியன்தோத்தப்

ஆமப்பாமனமுருகச்சித்தியாச்சு
அறிவுகொண்டுசிவயோகத்தடுத்துநோக்கித்
தாமப்பாசிவதீக்ஷைசத்திதீக்ஷை
சாதகமாசாலைசிவதாலைசத்தி

போமப்பாயிரண்டுக்கு மிடைகலைதான் சித்தி
போக்கோடேமவுனமுத்தி பூண்டுநோக்க
வேமப்பாமூலத்தீ பேசோடு
மொருகோடிசூரியன்பேர் ஒளிகாணும். ௱௪௨

சிவத்தின்கூறு-சத்திகூறு.

காணுதற்கும்மவுனமுற்றுப் பாருபாரு
காசினியில்விசாரமெல்லாந் தள்ளுதள்ளு
வீணப்பாவிசாரமென்ன சமுசாரமென்ன
வெட்டவெளியொன்றுமில்லை சிவத்தின்கூறு
தோணுகின்றரூபமெல்லாஞ் சத்தியாகுஞ்
சுருதிமுடிவிதிரண்டு மல்லா துண்டோ
வூணுகின்றபஞ்சகர்த்தா ளெல்லாமச்சு
வுறுதியிந்தக்கருவின்றி வேறேதாதே. ௱௪௩

சடவர்ழக்கை.

ஓதுவதுவேதமே யோதவேணும்
உலகத்தில்வேதமில்லா தொன்றுமில்லை
மாதுமக்களென்றுதா மெண்ணியெண்ணி
மாள்வதற்கும் பிறப்பதற்கும் வைத்தானீசன்
துதீவென்றதீயினிலே விழுந்தாயானால்
செடம்விழுந்துபோகுமடா ஞானமேது
தாதுவென்றசடமிருந்தால் ஞானவாய்க்குஞ்
சகலகலைத்தியானமெல்லாந்தருகுவாரே. ௱௪௪

நூலின்மகத்துவமுரைத்தது.

பார்ப்பதற்குஇந்நூலே பார்க்கவேணும்
பரிபூரணசூத்திரமாய்ப் பாடினேன்யான்
தீர்ப்பதற்குவினைகளெல்லாந் தீட்சைசொன்னேன்
செயமானகற்பமது தெளியச்சொன்னேன்
கூர்ப்புடனேவாதத்தின் விபரஞ்சொன்னேன்
குறைகளெல்லாந்தீர்த்துவிட்டேன் கூர்ந்துபாரு
சூர்ப்பானகியாசைகொண்டே யெல்லாம்போச்சு
சுருதியுள்ளகொடியனென்று மெல்லாம்போச்சே. ௱௪௫

லோகத்தோடொத்துவாழ்தல்.

ஆச்சிந்தலோகத்தி லிருக்கும்போது
அகடருடன்கூடாதே யாணவம் பேசாதே
நோக்கிந்தவுலகத்தில் நடக்கலாகா
நடந்தாலும்மவுனத்தே தூங்குதூங்கு
காச்சந்தமவுனத்தை விட்டாயானால்
கருதவிடான்கொல்லுமடா தியானம்போச்சு
மூச்சென்ற யோகமுதல்ஞானம்போச்சு
முறையோடேயிருக்கவென்றால் குகையைக்காரே ௱௪௬

## சித்தரென்போர்நெறி.

கார்ப்பதுதான்பூரணத்தைக் காக்கவேணும்
 காரென்றுபுருவமையத் திருக்கவேணும்
தீர்ப்பதுதான்வாசனையைத் தீர்க்கவேணுஞ்
 செகமெல்லாமொன்றுமில்லை யெண்ணவேணும்
ஆர்ப்பனத்துக்கழிவில்லா திருக்கவேணு
 மப்பவல்லோசித்தனென்ற ஆண்மையாச்சு
நாற்பதுக்குள்கற்பமுண்ணக் கோடியாச்சு
 நரைத்தாக்கால்நாளதிகஞ்சொல்லும் நன்றே. ௱௪௭

(வருடமில்லை) நன்றாக்காளதிகஞ் சென்றாலென்ன
 நாட்டிப்பார்வருடமொழில் சித்தியொன்று
பன்றான ஆண்டதுதான் பத்துக்குள்ளே
 பரிவானகாயசித்தி யோகசித்தி
யுன்றானகெவுனசித்தி ஞானசித்தி
 யுரப்பானசட்டைதள்ளிக் கரந்தியாகும்
ஒன்றானதேகமது வருபமாகு
 முத்தமனைகத்திநடு வோடுப்பாரே. ௱௪௮

## சட்டைகழலுமார்க்கம்.

ஓடுகின்றதத்துவந்தான் தொண்ணூற்றாறு
 மோர்கருவிக்கோர்சட்டையிரிந்ததானால்
சாடுகின்றபிறவியெல்லாந் தள்ளிப்போச்சு
 சாயுச்சியபதவியிலே சார்ந்துபோச்சு
பாடுகின்றவேதாந்த வெளியாய்போச்சு
 பரிபூரணந்தானாச்சு பகலுமாச்சு
வேடுவன்றானெடுத்தபுழுத் தன்ரூபங்கொண்ட
 விதமாச்சுமாய்கையெல்லாம் வெளியுமாச்சே. ௱௪௯

ஆச்சப்பாவாதத்தின் கருவைக்கேளு
 வப்பனேவாயிரத்தி னூறுக்குள்ளே
பேச்சப்பாசகலகலை செய்தியெல்லாம்
 பேசாதகருவையெல்லாம்பேசிவைத்தேன்
போச்சப்பாவேசிவைத்த கருவேதென்றால்
 புகழாசைவுக்காரப்போக்குத்தாக்கு
மேச்சப்பாமுப்பூவின் தீட்சைமார்க்க
 மியலானகடுங்காரச் செயநீர்போக்கே. ௧௫௰

## நூல்தொகைவிரிவுரைத்தல்.

போக்கானசுண்ணத்தின் கருவுஞ்சொன்னேன்
 புகழானசெயநீரின் சல்லுஞ்சொல்லி
வாக்கானகளங்கோடு செந்தூரங்கள்
 வகையானதிராவகமுஞ் சரக்கின்வைப்பும்
தாக்கானகருவோடு கருவுஞ்சொல்லி
 சாதகமாங்கைபாகஞ் செய்பாகங்கள்

தூக்கான இடைபாகப் பாசைபாசஞ்
சுறுக்காருந்தேகமொடு தேகமெண்ணே. ௧௫௧
எண்ணவேஞானமொடு மூலிகையின்கூறு
மியல்பானவையாக மெல்லாஞ்சொன்னேன்
வண்ணமாமெந்தெந்த நூல்களெல்லாம்
வாகானதிகண்டுமது மருவிப்பாரு
பொன்னுனபொன்னதுபோ லிந்நூலுந்தான்
போக்கொன்றுந்தப்பாது மறைக்கவில்லை
நன்னயமாஞ்சாத்திரத்தில் மறைப்பேமொன்று
நாட்டினேன்வெளியாக நாட்டினேனே. ௧௫௨

கயவர்நிலைமை.

நாட்டிலேயிப்படிதான் வெட்டவெளியாக
நாட்டியுந்தானறியாட்ட லென்னசெய்வோம்
பாட்டிலேசொன்னதொன்றும் பலியாதென்றும்
பாவிகடானெடுத்துரைப்பார் பழமையெல்லாம்
வீட்டிலேயிருந்துகொண்டு வீண்வாய்ப்பேசும்
வெள்ளாட்டிபயல்களுக்கு சாத்திரமெய்யாமோ.
தேட்டிலேசாத்திரத்தைத் தேடவேணுந்
திறவியிலேமனமிருக்கச்சித்தியாமே. ௧௫௩

பூசையில்தாயைநினைதல்.

சித்திக்கவேணுமென்றால் சொல்லக்கேளு
செகச்சாலமாடுகிற தாயைக்கேளு
புத்திக்குமவள்பதத்தைப் பூசைபண்ணு
போக்கொன்றுந்தப்பாது பேர்ப்போகாது
முத்திக்கும்பூசைமுறை தன்னைக்கேளு
மூண்டதொருசமாதிக்கு எகிறவேணும்
பத்திக்குமூதண்ட லேகியந்தான்
பாங்கானலகிரியப்பாசட்டமாமே. ௧௫௪

தாய்வரமீதல்.

சட்டமாங்கற்பத்துக் குறுதியாகுந்
தாயோடுதந்தைப் பிறிதியாகு
மிட்டமாம்வாமத்தைக் கொண்டாயானு
லெடுத்ததொருதுறையெல்லாமிடறிப்போகுந்
தொட்டதொருபூசையிலே வாமம்வைத்து
சுகமாகப்பூசிக்கச்செலமதானால்
அட்டமாசித்தியது வாச்சுதப்பா
ஆத்தாளாம்பபனுக்கு மாச்சுதெண்ணே. ௧௫௫
(விவேகதாட்சி) ஆச்சுதேயோசத்துக் கேணியாச்சு
வப்பனேகற்பத்துக் காகாபாரும்
வாச்சுதேயென்றுசொல்லி வாமங்கொண்டு
மதிமயங்கிவாய்புலம்பி மயங்கிப்போனால்
யேசசுதேசாபமதுதீரவில்லை

யேமமென்றவித்தையது மெய்தவில்லை
காச்சுதேயறிவென்ற ஞானப்போச்சு
கசுமாலவாதியென்ற கழுதைதானே. ௧௫௬
பச்சைப்பூர்வைப்பு.
தானென்றகற்பூரஞ் சொல்லக்கேளு
சாதகமாய்பரங்கிவைப்புக் கிடையாதப்பா
யேனென்றசூடனது பலந்தானொன்று
மியல்பானவெடியுப்புப் பலமுங்கால்தான்
சேனைறைவுவாப்பூவும் பலமதொன்று
சேர்திலேகளஞ்சியொன்று புழுகுகூட்டி
வானென்றஆவின்னெய்விட்டரைத்து
வைத்துநீகுப்பியிலே சீலைசெய்து. ௧௫௭
செய்துமேவாலுகையில் தீமூட்டி
சுகமாகமுத்தியு மூன்றுசாம
மெய்துமேதீயாற்றி யெடுத்தாயானால்
விளங்கேதங்காய்போலவுந்தா னிருக்கும்பூரம்
கொய்தமொருகுங்குமப்பூ வாசம்போலக்
குணமாகும் பச்சையென்ற பூரந்தானு
மெய்துமேயளப்பாகும் வாதத்துக்கு
மிதுவாதிகுருவாகு மிச்சிந்துபாரே. ௧௫௮
(சவ்வீரவைப்பு பாரப்பாயின்னமொருசேதிகேளு
பரிவானவீரத்தின் வைப்பைக்கேளு
நேரப்பாகடைதனிலே விற்கும்வீரம்
நேராகப்பலமொன்று மெடுத்துக்கொண்டு
சேரப்பாவதினோடு துரிசிசீனஞ்
செய்தமொருநவச்சார மன்னபேதி
யூரப்பாகறியுப்பு யுவருப்போடு
யுறவானவெடியுப்புப் பலமுங்காலே. ௧௫௯
காலாகஇதுவெல்லாம் பொடித்துக்கொண்டு
கருணைபெறவேணுமென்று குப்பிக்கேற்றி
நாலாகமுத்தியு மாறுசாமம்
நல்மாகவெரித்ததனை வாங்கிக்கொண்டு
பாலானதேங்காய்போ லிறுகிநிற்கும்
பண்பாகவுடைத்ததனை வைத்துக்கொண்டு
சேலாகமுன்போலேநிறுத்திக்கொண்டு
சேர்த்துநீபொடித்தெடுத்துக் குப்புக்கேற்றே. ௧௬௰
வீரத்தின்மகத்துவம்.
ஏற்றியேமுன்போலே எரித்துவாங்கு
இப்படியோமும்முறைபி லிருக்கும்வீரம்
தேற்றியேயிவ்வீரஞ் சகலத்துக்குந்
திறமானகுருவடா வீரராசன்
நீற்றின்முருமுருக்கினங் கட்டினமுங்கோடி

நேரானசெந்தூரக் களங்குகோடி
வீற்றியேசெயநீருந் திராவகமுங் குருவும்
மேலானசாரணையும் வீரமாமே. ௧௬௧
சித்தருக்குண்டான நாலுவித்தைவிபரம்
வீரமாஞ்சித்தருக்குச் சொல்லக்கேளாய்
வித்தையிலேநாலுவித்தை மேலாம்வித்தை
வாரமாம்வாதமொடு வசியமாற்றும்
வளமானஅஞ்சனமும் வரவும்வேணும்
வீரமாமிதுநாலு மில்லாவிட்டா
லலைவாருஞ்சித்தருக்கு லெடுக்கமாட்டார்
பாரமாம்வாதமொடு வசியஞ்சொன்னேம்
பார்ப்போற்கு அஞ்சனமு மாற்றம்பாரே. ௧௬௨
மாத்தமை. மாற்றமென்றவித்தைக்கு வகையைக்கேளு
வால்நீண்டகருங்குருவி யில்லாவிட்டால்
தோற்றுன்றகாமரூபி பினைச்சல்பார்த்துச்
சுருநியாய்ப்பிடித்துவந்து சொல்லக்கேளாய்
ஏற்றுகின்றவெவ்வேறே சட்டிற்போட்டு
வெரித்துநீவறுத்திடுவாய்கருகுமட்டும்
போற்றுகின்றயழிஞ்சிலின்வேர் கொடுகிண்டி
பொடியாக்கிக்கரிப்போலே வறுத்துக்கொள்ளே. ௧௬௩

அழிஞ்சில்தயிலம்.

வறுத்தகரிதனையரைப்பாய் தயிலங்கொண்டு
வாகானதயிலத்தின் வளமைகேளாய்
பொறுத்ததொருயழிஞ்சிவிரைத் தயிலஞ்செய்து
புதுமையுள்ளதயிலமது விட்டுமத்தி
செறுத்தவிதைப்பொடிசெய்துக் கலசத்திட்டுத்
தீயானசூரியன்றன் முகத்தில்வைக்கக்
கறுத்ததொருதயிலமது விறங்கும்போது
கரியுடனேசேர்த்தரைத்துச் சிமிழில்வையே. ௧௬௪

வசியம் கருங்குருவிமை குழியானைமை.

வைத்ததனைதிலதமிட வசியமாகு
மாற்றமாந்தேகமது ஆரத்துங்காணு
வுற்றதொருகருங்குருவி யிதுபோற்பண்ணு
வுறுதியாந்திலதமதுவுண்மையாகுஞ்
சித்தியுள்ளகுழியானைச்சிறங்கையொன்று
செய்திடவேமுனபோலேசித்தியாகும்
புத்தியுள்ளபேர்களுக்குப்பிழைக்கச்சொன்னேன்
புதுமையுள்ளவஞ்சனத்தைத் தப்புலக்கேளாய். ௧௬௫
(அஞ்சனமை)கேளப்பா அஞ்சனத்துக்கஞ்சனப்பாஷாணங்
கிடையாதிப்பறங்கிவைப்புக் கொடுக்கமாட்டான்
நாளப்பாநாட்டிலுள்ள கருவைக்கொண்டு
நாட்டுகிறேனஞ்சனத்தை நன்றாய்க்கேளு

வேளப்பாகருக்குருவி சிறந்தெரான்று
விதமானபச்சோந்தி கடும்புகாக்கா
சூளப்பாபச்சைப்பாம் பரனைபூநாகஞ்
சோதியொத்தயிந்திரமாங் கோபப்பூச்சி. ௧௬௬

மணத்தவளைத்தயிலம்.

பூச்சியென்றவகையெல்லா முழுதுமாகும்
புகலுகின்றமத்தரெல்லாந் தலைகளாகும்
ஆச்சியென்றதுவெல்லா முணர்த்தித்தூளா
யாக்கியேபரணியிலே யடைத்துக்கொண்டு
வாச்சுதென்றமணத்தவளை தயிலஞ்சொல்வேன்
மைந்தனே நூறுதானெடுத்துவந்து
காச்சிதென்றவெயிலிலே யுலாத்திக்கொண்டு
காட்டிணுமணக்குமுத்தக்காரெள்ளோடு. ௧௬௭

திரிசெய்விதம்.

எள்ளோடுஅழிஞ்சில்விரை யிடித்துக்கொண்டு
இதமாகக்குழித்தயில மிறக்கியேதான்
விள்ளாதேபரணியிலே யடைத்துக்கொண்டு
மேன்மையாம்பெண்ணுடைய விலக்கச்சீலைத்
தள்ளாதேசாணுகள் சதிரமாகத்
தானெடுத்துவதனில்மூன்றாள் பரப்பியேதான்
கொள்ளமட்டுந்திரிபோலே யுருட்டிக்கொண்டு
குணமானவெள்ளெருக்கின் நூலைச்சுற்றே. ௧௬௮

மைவாங்கும்வகை-மைபார்க்கும்பருவம்.

சுற்றியதோர்திரியதனை விளக்கிலிட்டுச்
சுகமானமுன்றயில மதனில்வார்த்துப்
பத்தியாங்காராமை யோட்டுக்குள்ளே
பத்துகின்றமையதனைப் பரண்டிக்கொண்டு
வெற்றியாமுன்றயிலம் புத்தூத்தேனும்
விதமாகச்சரியிடையாய் கூட்டிமத்தி
சித்தியாம்பதினாறு வயதுசென்ற
செல்வர்கையிலிட்டிடவே தெரியுந்தூரம். ௧௬௯

அஞ்சனத்தின் குணம்.

தூரமதுநாழிகைக்குள் பாதாளத்திற்
சூட்டிவைத்ததனங்களெல்லாந் தோணலாகும்
காரமதுஆர்கையி லிட்டாலுந்தான்
கைகடந்துகாணுமடா அதீதமைதான்
வாரமதுவானபேய்க் கணங்களெல்லா
மாறிவிட்டமந்திரங்க ளொன்றும்வேண்டாஞ்
சூரையாம்பேய்களுக்கு கருவதொன்று
சொல்லுகிறேன்கழுதைநெய்யின் கறுக்குத்தானே. ௧௭௰

பூதவிலக்கத்தயிலம.

சுறுக்காகயிருக்கவென்றால் சொல்லக்கேளாய்

சுருதியாங்குழைதயுட கொழுப்பைவாங்கி
யிறுக்காகவுருக்கிநெய்யை யெடுத்துக்கொண்டு
யிதமானதயிலங்களிலே தீபமேற்று
உருக்கானபேய்பூத மோடிப்போகு
மூண்மையிதுசொல்லிவிட்டேனுலகுள்ளோர்க்குச்
சுறுக்கானவாதவித்தை யுருமுன்னாகத்
தரணியிற்செய்துகொண்டுதபசுபண்ணே. ௧௭௧

தனங்களிருக்குந்தலம்-அளர்மலை

பண்ணையிலேதனங்கிடைக்குந் தலங்கள்சொல்வேன்
வுறைக்கிறேனழகர்மலை யுயர்த்தானும்
உண்ணியதோர்மதுரைக்கு வடமேற்காக
பாரிலேயலையாதே பாங்குகேளாய்
நண்ணயிலேசுனையருகில் விருட்சமொன்று
நலமாகவதின்கீழே சுனைதானொன்று
வுண்ணயிலேயருவியுட வூறலப்பா
வுலகத்தோராடுவார் தீர்த்தமென்றே. ௧௭௨

சித்தர்வைப்பு. தீர்த்தமென்றவச்சுனையில் கிடாரமொன்று
செயமான ஆய்க்கால் தன்னில்தூங்கும்
தீர்த்தமென்றவோராளுக் குள்ளேயப்பா
நேரானசித்தர்வைப்பு நெடுங்காலமாச்சு
காத்தமென்றகாயசித்திச் செய்யவேண்டில்
காசினியிலதையெடுத்துச் செலவுசெய்து
வாத்தமென்றகற்பமுண்டு வாழ்வோர்க்காகும்
வையகத்தோரசைவைத்தால் வாயாதென்னே

மயிலாடுமலையில் கார்த்திகைவீரவர்ச்சுனவைப்பு. ௧௭௩

வாய்க்கவின்னஞ்சொல்லுகிறேன் மதுரைக்குமேற்கே
மலையொன்றுமயிலாடும் போத்தையென்பார்
பாக்கியமாமம்மலையிற் கிணறொன்றுண்டு
பாரப்பாவதிலிறங்கிப் பாருநீதான்
தாக்கியதோரிரண்டாளின் தாழப்போனால்
தங்கமென்றபாளமது நிறையவுண்டு
காக்கியதோர்பாளத்தை எடுத்துக்கொண்டு
கார்த்திகைவீரவர்ச்சுனன்றான் வைத்தவைப்பே. ௧௭௪

மைநாகமலையில் சித்தர்வைப்புச்செந்தூரம் குகைகதவுதிறக்க.

வைப்பானபவனச் மலைக்குமேற்கே
மைனாகமலையென்று அதற்குப்பேரு
செப்பானகுகையொன்று வதிலேயுண்டு
செந்தூரக்காடப்பா சித்தர்வைப்பு
மெய்யானகுகைவாசல் திறப்பதற்கு
விதமொன்றுசொல்லுகிறேன் விரும்பிக்கேளாய்
ஒப்பாகச்சொன்னஉச்சா டனஞ்செபித்து
உணர்வாகநூற்றெட்டு உருத்தான்சார்பே. ௧௭௫

செந்தூரப்பதம்.

சார்பாகச்செயித்திடத்தால் திறக்கும்பாரு
தயவாகவதினுள்ளே சென்றுயாளு
லார்வாகக்கோடிசெம்பில் செந்தூரங்க
லட்டலோகம்பழுக்கும் வேதைமார்க்கம்
பேராகமண்டலங்கொள் காயசித்திப்
பிணியானதணுகாது வயித்தியத்தின்மார்க்கம்
ஆர்வானகௌனசித்திக் குளிகைசித்தி
யட்டமாசித்திமுதலாடும்பாரே. ௧௭௬

கதவடைக்க-கருமலை.

பாரப்பாவதிலிருக்குஞ் செந்தூரத்தைப்
பரிந்துனக்குவேணமட்டு மெடுத்துக்கொண்டு
சேரப்பாகவதனை யடைக்கவேண்டிச்
செயித்திடுவாய் றூற்றெட்டு தம்பனந்தான்
ஆரப்பாகதவதனைத் திறக்கப்போறு.
ரறையுகிறேனின்னமொரு வதிசயந்தான்
காரப்பாயக்காட்டின் மேற்கதாகக்
கருமலையொன்றாமலையிற் சுனைதானென்றே. ௧௭௭

கருமலையில் தயிலவைப்பு

ஒன்றானசுனையருகிற் கிணறொன்றுண்டு
உத்தமனேதயிலமது நிறையநிற்குங்
கன்றானதயிலத்தைக் கலசந்தனில்
காணப்பாமுகந்துகொண்டு கருவைக்கேளாய்
நன்றானஇரும்புசெம்பு லோகமெட்டில்
நாட்டினால்தங்கமது தலமதாகும்
உண்டானசெய்திபிது யினங்கேளாய்
உரைக்கிறேன்வெளியாகவுரைக்கிறேனே. ௧௭௮

நம்பிமலையருகில் விபூஷணர்வைப்பு தங்கக்காசு.

உரைக்கின்றேனம்பிமலை நம்பிக்கோவி
லூற்றதொருசந்நிதிக்குக் கிழக்கதாக
நிறைக்கிறேன்மலையருகில் குகைதக்கலு
திற்குதடாவதனடியில் தங்கக்காசு
கரைக்காசுங்கற்குழிதா னொன்றுக்குள்ளே
கனமென்றகாசதுதான் கோடியுண்டு
திரைக்கின்றேன்மூடிக்கல் செய்துமூடி
திறமாகஇருக்குமடா திறக்கொண்ணாதே. ௧௭௯

கதவுதிறக்கத்தியானம்.

என்றானகல்திறக்கும் வகையைக்கேளாய்
உற்பனமால்வயிரவரைப் பூசித்தேனே
நன்றானவயிரவன்றன் தியானமோத
நலமானமூடிக்கல் திறந்துபோகும்
பன்றானகனகத்தை யெடுத்துக்கொண்டு

பரிவானமூடிதன்னை யடைத்துப்போடு
வின்றானவிபூஷணர்தான் வைத்தபின்பு
மேதினியில்நடவாதே மலையிலேறே. ௧௮௰
மருந்துமலை. ஏறுதற்குஇன்னமொருவகையைக்கேளாய்
இயல்பானகுமரிக்குமேற்கேயப்பா
கூறுவாருலகத்தோர் மருந்துமலையொன்று
குறித்துவைத்தமருந்ததனை யரியமாட்டார்
தேறுவாயம்மருந்தை யறிவதற்கு
செய்தியென்றுசொல்லக்கேள் மேற்கதாக
ஏறுவாயம்மலையி னுச்சிதன்னி
லிருக்குதடாசுனையொன்றுயிருக்கும்பாரே. ௧௮௧
பனைப்பாஷாணவேதை.
இருக்கிறசுனைக்குள்ளே பனைப்பாஷாண
மியல்பானபனங்குலைபோல் கிடக்கும்பாரு
அருகின்றகுலைதனை யெடுத்துக்கொண்டு
அழகானதீயிலிட்டுச் சிவக்கக்காச்சி
பருகின்றவெட்டான பாலிற்போட்டால்
பாதியிருகூறாக வெடித்துப்போகும்
குருக்கொண்டபாஷாண கவுரிபோலக்
கோழிமுட்டைகருப்போன்றகொள்கைகாணும். ௧௮௨
மருந்துமலையில் தயிலமிருப்பிடம் அனுமார்வைப்பு.
காணுகின்றபாஷாணங் கழற்றிவாங்கி
கால்ப்பணமாயோதவிடு கற்பமாகுந்
தோணுகின்றபாஷாண வகையிற்றேய்த்து
சுகமானகாரமிட்டு உருக்கிவாங்கிப்
பூணுகின்றநவகோலந் தன்னிற்பூட்ட
பொன்னாகும்பத்தரையும் பொய்யாதப்பா
கோணுகின்றவதண்டிகைக் குகையொன்றுண்டு
குகையினிடபாகத்தில்வாசலுண்டே. ௧௮௩
வாசலதுகாணும லடைத்துப்போட்டார்
மகத்தானசித்தருடமாய்கைமாய்கை
ஊசலென்றகதவதுதான் திறப்பதற்கு
உபாயமொன்றுசொல்லுகிறே னுண்மையாகக்
காசலையாயம்மலையி லிருந்துக்கொண்டு
கருதியேநவகோண வாலைப்பூசை
யேசனுடனேற்பதனுள் பூசித்தக்கா
லீஸ்பரியாள்கிருபையினால் வாசற்காணும். ௧௮௪
கிருபையினால்வாசலது திறந்ததானால்
கேளப்பாவதனுள்ளே நுழைந்துபாரு
உறுதியுள்ளவீடதுபோல் விசாலங்காணு
மொருபக்கத்தொருகிணற்றில் தயிலமிருக்கும்

பொரியென்ற அத்தயில மொண்டுக்கொண்டு
பூரணமேயென்றுசொல்லிப் பூசித்தேதான்
மறுபடியுங்கதவைத்தா னடைத்துப்போட்டு
வந்திருந்துசெய்கின்ற மார்க்கங்கேளே. கஅரு

தயிலம்வந்தமார்க்கம்.

மார்க்கமந்தத்தயிம்வந்த வகைதான்கேளாய்
மாருதிதான்மருந்துமா லையிற்சென்று
சேர்க்கையிலேகொண்டுவந்தார் ஸ்ரீராமர்போரில்
செத்தவர்கடமையெழுப்புஞ் செய்கையாலே
போர்களத்தில்மடிந்தார்கள்பிழைத்தபோது
போகாதவாங்கிவைத்தார் புதுமையாக
மாற்கமுள்ளதயிலமது கொண்டபேர்க
ளளவிறந்தசித்தராட்ா ஆதியாமே. கஅசு

ஆமிந்தத்தயிலத்திற் பணவிடைதான்கொள்ள
ஆதிசதாசிவன்வரைக்கு மிருந்தும்பாரு
வாமிந்தசாத்திரந்தான் கிடைத்தபேர்க்கு
மறுபுறவியில்லைமகத் தானசித்தன்
சோமிந்துதரித்தசிவன் சொன்னமார்க்கஞ்
சொல்லிவிட்டேன்வெட்டவெளி யாகத்தானே. கஅஎ

தோற்றமெய்தல்.

வெளியாகத்தோணுதற்குக் கருவைக்கேளாய்
வேதாந்தநூல்களெல்லாம் விரைந்துபாரு
ஒழியாதஆசையெல்லா மொழித்துப்போடு
ஊடுவெச்சுழிமுனையை யூணிப்பாரு
வழியோடேகற்பமுண் ணவகையைப்பாரு
வாதவித்தைசெய்வதற்கு வகையைப்பாரு
தெளிவாகவேறுதற்குத் தீட்சைபாரு
செகசாலக்கூத்தெல்லாஞ் சேரப்போக்கே. கஅஅ

கொங்கணர்பெருமை.

போக்கானசாத்திரங்களொன்றுமில்லைப்
பூரணத்தினூல்போலே சொல்லாதொன்றும்
நோக்கானகொங்கணர்சொல் கடைக்காண்டத்தில்
நுணுக்கங்களதிகமுண்டு கண்டுபாரு
வாக்கானவிந்நூலு மந்நூலும்போல்
வகைவிபரமானதொன்றும் விளங்கவில்லை
தூக்கானதூக்கெல்லாஞ் சொல்லிவிட்டேன்
சோதித்தால்தெரியுமடா சுருதிச்சொல்லே. கஅகூ

நூல்மகுத்தவம்.

சுருதிகண்டால்சுருதிகொண்டு யேறவேணுந்
துன்மார்க்கர்க்கிந்நூலைச் சூட்டலாகா

பருதிகண்டபனிபோலே வினைகள்நீங்கும்
பாரிலுள்ளோர்க்கிந்நூலை பகரவேண்டாம்
கருதாமலிந்நூலை யீய்ந்தாயானால்
கயிலாசசித்தர்வந்து சபிக்கச்செய்வார்
ஒருத்தராய்க்கண்டுகொண்டு மனதுள்வைத்து
வுருத்துடனேவந்துவிடு மலையின்மீதே. ககய

மீதானமலைகளிலே யேறினாலும்
விருதாகுமிந்நூலைக் கைவிடாதே
வாதாடுஞ்சித்தர்வந்து யெதிர்த்தாரானால்
மறவாமலிந்நூலை யெடுத்துப்பேசு
ஓதாமல்வாய்பிதற்றி யோடுவார்க
ளுனக்குத்தாவென திராருண்டோவென்று
ஆகாரமானதொரு கருவெல்லாந்தா
னறைத்ததினால்பூரணநூ லானவாறே. கககக

குழிக்கல்லளவு.

வாறானகுழிக்கல்லின் மார்க்கங்கேளாய்
மைந்தனேபிரம்மாவின் சிரசுபோலே
கூறானவகலம்மணி விரல்முப்பத்துங்
கொள்ளையாம்நிளமணி விரல்நால்பத்து
வீறானவிளம்பதுதான் விரலிரண்டு
வீதியிலேயாழமிது விரலிரண்டு
பேறான இருபுறமு மூக்குமாகும்
பெரிதானகுழவியைத்தான் பேசுவேனே. ககஉ

குழவிக்கல்லளவு-பிரம்பளவுசெபமாலைக்கணக்கு

பேசுகின்றேன்பதினாறங் குலமாய்நீளம்
பெரிதானமுகவட்ட மணிவிரல்நால்வீதி
யாசுநேரிம்பிடியங் குலம்பத்தாகு
மரவிடையுஞ்சிவலிங்க மானவாறும்
வீசுகின்றபிரம்பதுதான் மொழியைந்தாகும்
வேதாந்தநீளது விரல்பத்தொன்று
ஈசுரன்றான்வகுத்தருளிங் கணக்கிதப்பா
யேற்றசெபமாலைபதி னாறுமுகமஞ்சே. ககங

குண்டலப்பிரமாணம் யோகவெட்டி.

அஞ்சாகுமாராகு மதிகமாகு
மணிவிரலால்யோகதண்டா றாறுமாகும்
பஞ்சாட்சரக்கவசகுண் டலந்தான்கேளு
பரியினுடப்பதிகம் பளிங்கதிகமாகும்
மஞ்சாடிபதினொன்று பதினாறு
மக்களேயிருபுரமு மகிழ்ந்துகொள்ளு
நெஞ்சற்றுக்கச்சாகிற யோகவெட்டி
நெடுநீளந்தொண்ணூற்று றங்கலமால்நேரே. ககச

### கயிலாயவக்ரகம்-ஆசனம்-கோவணம்-மணிகைச்சலம்.

நேரானவீதினல் விரலேயாகும்
வீஷ்டைக்காசனம்புலியா சனமுமாகும்
கூறுனரசலிங்கம் பூசையாகும்
கோவணந்தான்பூங்காவிக் கடகக்கையிற்
சீரானரசக்குளிகைச் செபமாலைக்குச்
செகமதனில்கிடையாது செயம்விசேடம்
பேரானகைச்சிரந்தான் உப்புமணியப்பா
பேச்ரியகயிலாய வற்கத்தோற்கே கசுரு

### வற்கத்தின்பெருமையறிதல்.

வற்றகத்திலதிகமடா சிவயோகந்தான்
வண்மையுள்ளமெஞ்ஞான மார்க்கம்ரெண்டு
சொர்க்கத்தில்சொர்க்கமென்ற பேர்பெறவுனக்குத்
தொல்லுலகில்மனிதரோ டுறவுமுண்டோ
கார்த்திக்கக்காக்கமென்ற கசடர்தங்கள்
கையிலேயேற்பதுநான் மிகவுங்கொஞ்சம்
மார்க்கத்திலாகவுன்னை வணங்கவேணும்
வணங்காமற்போனதென்ன வறிந்துகொள்ளே. கசுசு

### சிவயோகம்-மெஞ்ஞானிமார்க்கம்.

அறிவானபேரின்பத்தடுத்தானுகி
லசைவையென்றதீட்சைபத்து மறிந்தானுகில்
குறியானசிவயோகங் குறித்துக்கண்டார்
கோமளையாம்பராபரைசிர்க் குணத்தைக்கண்டார்
பிரியாமல்சிவனுடைய வொளியைக்கண்டார்
பேரானசிவயோக ரிஷிமெஞ்ஞானி
நெறியானவிதர்க்கெல்லா மறிவேயாசா
நினைத்துமக்காளொருமனதாய் நிலைத்திடுமே. கசுஎ

### யோகத்துக்கதிகாரி.

நிலைத்திடுரென்றாலும் நிலைக்கமாட்டான்
நீடுலகில்கோடியிலே யொருவனப்பா
கலைத்திடுரென்றாலுங் கலைக்கப்போகா
கனத்தநல்முள்ளதொரு ராசிசேர்ந்தோர்
மலைத்திடுலென்றாலு மலைப்பாருேதான்
வச்சிரம்போலறிவுடைய மக்காள்மக்காள்
உலைத்திடுரென்றபுத்தி யுலகிலுள்ளோ
ரோகோகோவொருகோடி வுனுத்தர்காணே. கசுஅ

### கற்பிபொய்வேடர்நிலை.

காணுவேன்வாதமென்பார் யோகமென்பார்
கற்பமுண்ணப்போறனென்பாருண்டேனென்பார்
பூணுவேன்தீட்சைபத்தும் பெற்றேனென்பார்

பூரணநூல்பாராதப்புலையரப்பா
தாணுவாய்நின்றபரஞ் சோதிகாணுற்
சதாசிவன்வந்தாப்போல் பூசைசெய்வார்
ஆணுவத்தாலலைந்துகெட்ட மட்டைப்பேச்சே
யடுத்துநின்றுகேளாதே யகலப்போமே. ௧௯௯

சித்தர்மரபுளோர்க்குரைத்தல்.

போவென்றுசொன்னதுதா லைரமந்தா
புகழ்பெரியசித்தருடமரபுள்ளோரைக்
கூவென்றுதர்க்கமிடு மூலமாண்பர்
கூட்டுறவைவிட்டுவிடு குன்றிவேறு
தேவரென்றுசித்தருடன் சேரவேணுஞ்
செப்புவர்வேதாந்தந் திறந்துசொல்வார்
ஆமென்றுவலையாதேகற்பங்கொள்ளாய்
அப்பனேயோகமுற்று லதீதப்பேறே. ௨௦௦

பேறறிதல்.

வேறென்றுசொல்வதுதான் ஞானப்பேறு
பேசரியவேதாந்தம் பெற்றபேறு
நூறென்றுபூரணநூல் பார்த்தபேர்கள்
நுண்மையென்றுஞ்சிவயோகத் திருந்தபேறும்
வாறென்றகாயசித்தி யானபேறு
மகத்தானதீட்சைவிதி யறிந்தபேறு
வூறென்றவமுர்தமதை யுண்டபேறு
மோகோகோகெவுனசித்தி யுறுதிப்பேறே. ௨௦௧

வயிராக்கியம்பூணல்-ஆக்கைநிலையாமை.

உறுதியாமித்தனைக்குங் கருவேதென்று
லுத்தமமாமனமல்லோ விதற்குமூலம்
பொறுதியாக்குணம்வந்து சார்ந்தமானல்
பூலோகமாய்கையெல்லாம் விட்டதாலுற்
சுருதியாமனமுருகி நிராசையானல்
சொல்லொன்றுந்தப்பாது சித்தியாச்சு
விறுதாவிலலைந்தலைந்து ஞானம்பார்த்தால்
வேரற்றமரம்போலே விழுந்துபோமே. ௨௦௨

பெரியோர்பெருமை.

வீழ்ந்திறந்துபோகின்ற பேரேயல்லால்
மெஞ்ஞானம்வாதவர்கள் சாணுரப்பா
சூழ்ந்திருந்தவண்டமெல்லாஞ் சோதித்தாக்கால்
சுகுர்தவர்ன்பேடியிலே டொன்றுகாணும்
வாழ்ந்திருந்தவுலகத்தே யிருந்தாலுந்தான்
மானிடரிலொருவனடாவறியப்போகா

தாழ்ந்திருந்ததன்மையுற்றுப் பெரியோர்போலத்
தாரணியிலேயிருப்பார் பெரியோர்தானே. ௨0௩

### சமயக்கோள்.

தானென்றகலைக்கியான மறிந்தாலென்ன
தற்கமொடுமாயையுற்றால் தவறிப்போகும்
வானென்றநிராசையுற்று மாய்கைபோக்கி
மனமுருகிப்பூரணத்தி லன்புசேர்ந்து
கோவென்றுயிழிந்தவர்க்கு யித்தனையுமெய்துங்
குவலயத்திலறுசமயக் குருடர்கேட்டார்
தேனென்றசிவபூசை சத்திபூசை
தெரிந்தவனேசிவயோகி சித்தனாமே. ௨0௪

### இந்நூலின்தொகைக்கியன்ற நூலின்பெயர்.

ஆமென்றசித்தருக்கு மிந்நூல்வேணும்
மப்பனேபூசையிரு நூறும்வேணும்
தாமென்றதீட்சையிரு நூறும்வேணும்
சாதகமாம்ஞானத்தி நூறும்வேணும்
ஏவென்றவாதமிரு நூறும்வேணும்
இயல்புராணகொங்கணார் நூறும்வேணும்
வாமென்றசார்வுக்குச்சட்டநாதர்
வைத்தாரேவெளியாக வாதந்தானே. ௨0௫

### கல்வியொழுக்கம்.

வெளியாகச்சொல்லுவரோ வேதநாலும்
வேதாந்தியானாக்கா லடக்கம்வேணும்
களியாகவுலகத்தே கருவைச்சொன்னால்
கழுதையவன்கரையேற மாட்டான்போபோ
சுளுவாகமனதுள்ளே யடக்கமானால்
சுருதியாஞ்சித்திக்குஞ் சித்தனாவான்
தெளிவாகப்பேசுவதார் சித்தர்பேசார்
திறப்பதார்செடமழிந்த ஞானிதானே. ௨0௬

### ஏகபாதவிளக்கம்.

ஞானமென்னயோகமென்ன இரண்டுமொன்று
நலமறியாமாடுகடான் வெவ்வேறென்பார்
பானமென்னவமுர்தமென்ன இரண்டுமொன்று
பண்பறியாப்பாவிகடான் சத்தமென்பார்
மானமென்னஈனமென்ன ரவிமதிதானென்ன
வையமென்னவானமென்ன ஆண்பெண்ணென்ன
கானமென்னவுலகமென்ன சாதியென்ன
கருதிப்பாரென்றுங்கு காணுங்காணே. ௨0௭

## பூசைபலன்.

காணுகின்றதர்மது செய்வானாகில்
காசினியிலவனுக்காமவன்பிதிர்க்குமாகும்
தோணவேபாவத்தைச் செய்வானாகில்
சொன்னவற்காமல்லாட்டால் சுத்தத்தார்க்காம்
ஊனவேசிவயோகஞ் செய்வானாகி
லுயிரதுதான்மோக்ஷமெய்தா மூண்மையுண்மை
பூணவேபூசைசெய்தால் சிவத்துக்காகும்
பூசையென்னமனங்கனிந்தால் புகழுமாச்சே. உ0அ

## அன்பிலார்ஞானக்குறி.

ஆச்சப்பாகனிவல்லோ பூரணந்தான்
னாகராமனமுருக வருமைமெத்த
காய்ச்சப்பாகின்றதொரு கன்னஞ்சர்க்கு
காயசித்திஞானசித்தி கடினமாகும்
பூச்சப்பாஞானிகடான்பூலோகத்தில்
பூரணமேதெய்வமென்பான் பூசையென்பான்
பேச்சப்பாமெத்தவுங்கன் படித்துச்சொல்வான்
பேசாமல்மனமுருகார்பெரியமாடே. உ0கூ

## உலகாதியந்தமுடிவறிதல்.

பெருமையென்னவாழ்வென்ன கீர்த்தியென்ன
பேச்சென்னமகிழ்ச்சியென்ன பிதிர்க்களென்ன
அருமையென்னசுகமென்ன கோவிற்குளமென்ன
அதீதமென்னஅரகரா சிவயமென்ன
உரிமையென்னவுறவென்ன சங்கற்பமென்ன
வுலுத்தமென்னஈதென்ன தற்பமென்ன
கருமையென்னசெம்மையென்ன கல்வியென்ன
காசினியில்நரகமென்ன சொற்கமென்ன. உக0

என்னவேகுருவென்ன சீடனென்ன
இயல்பென்னவியல்புகெட்டுப் போவதென்ன
வன்னமிருஞ்சாதியென்ன கீக்கமென்ன
மாய்கையென்னகற்பமென்ன அருவதென்ன
பொன்னென்னமனமென்னச் சீர்தானென்ன
பொல்லாததாயென்ன பிறப்பதென்ன
முன்னென்னபின்னென்ன முறைதானென்ன
முடிவறிந்தோன்சிவயோகி மூர்த்தியாமே. கஉக

மூர்த்தியென் றுமுத்தியென் று மிரண்டுஞ்சொல்வார்
முக்கியமென்பார்சிலதெல்லா மூடர்மூடர்
ஆர்த்தியென்றபூரணந்தா னல்லதுண்டோ
யதிற்பிறந்தைந்துவகையல்லா துண்டோ
கீர்த்தியென்றவகையறிந்து சித்தரானூர்
கிலேசமில்லாஞானியென்று சிலபேரானூர்
தீர்த்தியென்றரிஷியோடு முனிவரானூர்
சிவயோகியென்றதிரு நாமந்தானே. உகஉ

ஒடுக்கமுணர்வறிதல்.

திருவுடையநாமமென்ன சிவலோகந்தான்
செகத்திலுள்ளோர்செய்வதொன் றுஞ் செம்மையல்ல
அருவுடையதாயினுட ஆட்டுஆட்டு
ஆதியென்றசிவஆட்டு ஐயனாட்டு
ருவுடையோரறிந்துக்கொள்ளு மீதல்லாமற்
காசினியோர்சொல்வதிலே கதையொன்றில்லை
மருவுடையபூவினுட வாசம்போல
மனமுருகிப்பூரணத்தில் மாளுமாளே. உகங

ஆதிவஸ்து-அனுதிவஸ்து.

யாளர்மலாண்டிருந்தால் யோகியாச்சு
மார்க்கமந்தப்படிதானேமெஞ்ஞானிக்கும்
ஆளாமலாண்டிருப்பா ரானுந்தாயும்
ஆதிவஸ்து அனுதிவஸ்து ரெட்டுந்தானுங்
கேளாமற்கேட்டிருப்பார் நடனவோசை
கிரிகையென்றமனமங்கே ரிக்கிப்போகும்
வாளானவாழ்சிவ யோகவாழ்க்கை
மற்றதெல்லாமாய்கையென்றவாழ்க்கையாமே. உகச

நூலின்தொகை வகையின்பம்.

ஆமிந்தஇருநூற்றிப் பதினைருக்கு
ளடக்கிவைத்தபொருளெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
ஓமிந்தவுகைத்திலின் நூல்கிட்டி
லுலகத்திற்சித்ததிக முண்டாய்போச்சு
தாமிந்தசூத்திரத்தைக்கெணியாதிருந்தால்
தலைதெறித்துப்போகுமடா சத்தியஞ்சொன்னேன்
நாமிந்தபடிச்சொன்ன யோகிக்கிவாய்
நலமானபூரணசூத் திரந்தான்முற்றே. உகரு

# அகஸ்தியர்பூரணசூத்திரம் - உ௱யசு.

முற்றிற்று.